# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (17-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:21


# கைதடிப் பாலம் வரை படையினர் நேற்று முன்னேறியதாக அறிவிப்பு!

## அதிகாரி உட்பட 11 படையினர் உயிரிழப்பு

கொழும்பு,டிசெ.17

அரசாங்கப் படையினர் நேற்று நடத்திய 'கினிகிர-5 - கட்டம் இரண்டு' இராணுவ நடவடிக்கையின் போது கைதடிப் பாலம் வரை முன்னேறியதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு நுணாவில் பகுதிகளை உள்ளடக்கி கைதடி வரை மொத்தம் 11 சதுர கிலோ மீற்றர் பகுதியை படையினர் கைப்பற்றினர் என்றும் -

"ஏ-9" பாதையில் சாவகச்சேரி தொடக்கம் கைத[illegible] பாலம் வரையான 3 சதுர கிலோ மீற்றர் தூரமும் இதில் அடங்கும் என்றும் - நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய இராணுவ நடவடிக்கையின் போது. ஓர் அதிகாரியும் 11 துருப்புகளும் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் எதிர்பாராதவிதத்தில் படையினர் நேற்று அதிகாலை கவச வாகனங்கள், ஆட்லறிகளின் உதவியுடன் நுணாவில் மற்றும் கைதடிப் பாலத்தை நோக்கி முன்னேறினர்.

பலமான நிலக்கண்ணிகளையும் தாண்டி படையினர் முன்னேறிய போது புலிகள் அப்பகுதியிலிருந்து வெளியேறி இருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துத் துண்டிப்பு!

தென்மராட்சி,டிசெ.17

தென்மராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களை யடுத்து வடமராட்சிக்கும் கொடிகா மத்துக்கும் இடையிலான போக்கு வரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சி நோக்கிச் சென்ற வாகனங்கள் முள்ளிச் சந்தியில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கொடிகாமம் - யாழ்ப்பா ணம் சேவையும் இரத்துச் செய்யப் பட்டது. வான்களும் ஓடவில்லை.

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினமும் ஷெல்கள் வீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலும் மக்கள் இல்லாத இடங்களிலேயே ஷெல்கள் விழுந்தன என்று தெரி விக்கப்பட்டது.

(இ-15-173-117)

# போர்ச் சூழ்நிலையில் பேச்சு நடத்தும் நிலைப்பாட்டைப் புலிகள் நிராகரிப்பு!

## கடுமையான இராணுவ அணுகுமுறையைக் கைவிட வற்புறுத்துமாறு உலக நாடுகளிடம் கோரிக்கை

லண்டன்,டிசெம்பர்17

**போர்ச் சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.**

**அதேவேளை, இலங்கை அரசாங்கம் அதன் கடும்போக்கு இராணுவ அணுகுமுறையைக் கைவிடுவதற்கு அதனை இணங்க வைக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அனைத்துலக நாடுகளைக் கேட்டுள்ளனர்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகத்தினால் நேற்றிரவு விடுக்கப்பட்ட அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.**

வன்னியில் இருந்து விடுக்கப் பட்ட பத்திரிகை அறிக்கையை மேற் கோள்காட்டி லண்டனில் வெளியிடப் பட்ட நீண்ட அறிக்கை, வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கா மரின் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிப்புக்குப் பதிலளிக்கும் வகை யில் அமைந்திருந்தது.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் போரைத் தணித்துக்கொள்ள வேண் டும் என்ற தமது நிலைப்பாட்டை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு உதவி வழங்கும் நாடுகள் கோரும்!

### பாரிஸ் மாநாடு நாளை ஆரம்பமாகிறது

பாரிஸ்,டிசெ.17

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நாளையும் நாளை மறுதினமும் பாரிஸில் நடை பெறுகிறது. இந்த மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகள் யுத்த நிறுத்தம் செய்யும்படியும் பேச்சுவார்த்தை களை உடனடியாக ஆரம்பிக்கும்படி யும் இலங்கை அரசாங்கத்தை வலி யுறுத்தும் என்று இராஜதந்திர வட் டாரங்கள் தெரிவித்தன.

தற்பொழுது வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக பாரிஸ் செல்கிறார். இந்த மாநாட்டில் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்ளும் இலங்கைக் குழு இன்று விமானம் மூலம் பாரிஸ் புறப்படுகிறது. அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

போரை நிறுத்தி சமாதா னப் பேச்சுக் களை ஆரம்பிப் பது தொடர்பான உறுதிமொழி எதுவும் வழங் கப்படாத பட்சத் தில் இலங்கைக் கான நிதியுதவிகள் வழங்கப்படாது என்று நம்பப்படுகிறது. (இ-6)



## பங்கீட்டு அட்டை விநியோகத்தில் கிராம அலுவலர்கள் மோசடியாம்!

### நல்லூர் பிரதேச செயலர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.17

நல்லூர் பிரதேச செயலர் பிரி வைச் சேர்ந்த நான்கு கிராம அலுவ லர்கள் பொதுமக்களுக்கான உலர் உணவுப் பங்கீட்டு அட்டை விநியோ கத்தில் மோசடி செய்திருப்பதை தாம் கண்டுபிடித்துள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா அறி வித்துள்ளார்.

உலர் உணவுப் பங்கீட்டு அட்டை விநியோகத்தில் பெரும் மோசடிகள் இடம்பெறுவதாகப் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து உலர் உணவுப் பங்கீட்டு அட்டை கள் பிரதேச செயலரின் நேரடிக் கண காணிப்பின் கீழ் மீளாய்வு செய்யப் பட்டபோது இந்த மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டதாக சொல்லப்படுகி றது. சம்பந்தப்பட்டவர்களால் மோச டியாக விநியோகிக்கப்பட்டதாகக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிப்பது சாத்தியம் இல்லை

### டில்லியில் கதிர்காமர் தெரிவிப்பு

புதுடில்லி,டிசெ.17

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியங் கள் இல்லை.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ மன் கதிர்காமர் நேற்று புதுடில்லி யில் செய்தியாளர் மாநாட்டில் பேசு கையில் இவ்வாறு தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள கதிர்காமர் இந்தியப் பிர

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சைக் குழப்பும் விதத்தில் இந்தியா நடந்து கொள்ளாது

### தூதரகம் நேற்று அறிக்கை

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடை யில் சமாதானப் பேச்சுக்கள் நடை பெறுமிடத்து பேச்சுவார்த்தையைக் குழப்பும் விதத்தில் இந்திய அர சாங்கம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டாது.

மேற்கண்டவாறு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேசமயம் பேச்சுவார்த்தைக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக் கையை இந்திய அரசு விடுக்காது என்று இந்திய வெளி விவகார அமைச்சுப் பேச்சாளர் தெரி வித்தி ருப்பதாக இந்துப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

சார்க் உச்சி மாநாடு நடைபெறு வது சாத்தியம் இல்லை என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ)

## வவுனியாவில் வைத்து ஜயலத் திருப்பி அனுப்பப்பட்டார்!

### மடு தேவாலயம் செல்லும் முயற்சி தோல்வி

வன்னியில் விடுதலைப் புலிக ளின் கட்டுப்பாட்டிலுள்ள மடுமாதா தேவாலயத்துக்குச் செல்வதற்கு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு வவுனியாவில் உள்ள படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

மடுமாதா ஆலயத்திற்குச் செல்ல வென டாக்டர் ஜயலத்தும் காணா மல்போன படையினரின் உறவினர் கள் சிலரும் நேற்றுக் காலை வவு னியா வந்து சேர்ந்தனர். ஆனால் அவர்கள் மடுவுக்குச் செல்வதற்கு வவுனியாவிலுள்ள இராணுவ அதி காரிகள் அனுமதி தர மறுத்துவிட்ட னர்.

மடுவுக்குச் செல்லும் பகுதியில் நேற்றுச் ஷெல் தாக்குதல் நடத்தப் பட்டது என்று காரணம் காட்டியே படையினர் அனுமதி மறுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து ஜயலத் ஜயவர்த்தனாவும் உடன் வந்தவர்க ளும் கொழும்பு திரும்பினர். (ம-6)

## எழுதுவினைஞர் பயிற்சிநெறி ஒத்திவைப்பு

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தினால் எழுது வினைஞர்கள் II ஆ தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளை ஆரம்பமாகவிருந்த பயிற்சி நெறியின் மூன்றாவது பகுதி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக் கிழமை திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் ஆரம்பமாகி 24ஆம் திகதி வரை நடைபெறும் என்று பிராந்திய ஆணையாளர் மு.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ)

## சுற்றிவளைப்பு

கோப்பாய் வடக்குப் பகுதி நேற்று இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. தென்மராட்சிப் பகுதியில் ஆரம்பித்த மோதல் சம்பவத்தைய டுத்தே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (இ-10-15-17-173)

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.17

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒளி விழாவும் வருட இறுதி ஒன்றுகூடலும் நாளை திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண.ஏ.ஏ.போல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை, யாழ். அத்தியட்சாதீனத்தின் பேராயர் அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசனும் பங்குபற்றுவார். (இ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.17

சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் செல்வி டெய்ஸிலா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாடசாலையின் சகல மாணவர்களுக்கும் கல்வி உபகரணப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். (ம-15)

## சமுர்த்தி செயலணி குழு அமைத்தல்

கதிரிப்பாய், தம்பாலை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அமைத்தல் நாளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிவனேசன் தலைமையில் கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன், நிர்வாக உத்தியோகத்தர் வல்லிபுரம் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-178)

★ ★ ★

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளான ஜே-1, ஜே-2, ஜே-6 ஆகிய பிரிவுகளில் சமுர்த்தி செயலணிகளை அமைக்கும் கூட்டங்கள் நாளை திங்கட் கிழமையும் மறுதினம் செவ்வாய்க் கிழமையும் இடம்பெறவுள்ளன.

நெடுந்தீவுப் பகுதிக்கான சமுர்த்தி முகாமையாளர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டங்களில் புதிய செயலணிக்குழு தெரிவுசெய்யப்பட உள்ளதுடன், சமுர்த்தித் திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-6-7)

★ ★ ★

பத்தமேனி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அமைத்தல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உ.பகீரதன் தலைமையில் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தில் நாளை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன், நிர்வாக உத்தியோகத்தர் வல்லிபுரம் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். சமுர்த்தித் திட்டம் பற்றிய விளக்கவுரைகளும் , சமுர்த்தி செயலணியின் செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறும். (ம-178)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**நன்னித்தம்பி இராசரத்தினம்**

(சுன்னாகம் நாகம்ஸ் சினிமா உரிமையாளர்)

அவர்கள் சமாதான நீதிவானாக பதவி ஏற்றதையிட்டு மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சி.தியாகராசா(STR)
உரிமையாளர் STR பிலிம்ஸ்

ராஜா டாக்கீஸ் - யாழ்ப்பாணம்.
சரஸ்வதி சினிமா - திருகோணமலை.
சாந்தி சினிமா - மட்டக்களப்பு.
வசந்தி சினிமா - வவுனியா (81771)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நீண்டகாலமாக கட்டடத் திணைக்களத்தில் அமைய பணியாளர்களாக கடமையாற்றிய எமக்கு நிரந்தர நியமனம் பெற ஆவன செய்து நிரந்தர பணியாளர்களாக்கிய அரும் முயற்சிக்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்குக் கிழக்கு தமிழ் விவகார, இந்து அலுவல்கள் கலாசார அமைச்சருமான

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

**வி.கே.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்

நாடாளுமன்ற உறுப்பினர்

**எஸ்.தவராசா**
அவர்களையும்

பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிரந்தர நியமனம் பெற்ற பணியாளர்கள்
*யாழ்ப்பாணம்.* (C/14332) கட்டடத் திணைக்களம்.

## கண்ணீர் அஞ்சலி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினரும் சுதுமலை தெற்கைச் சேர்ந்தவருமான

**துரைச்சாமி சச்சிதானந்தன்**

அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திப்பதோடு அவர் தம் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய
தர்மகர்த்தா ,சபையினர்,
சுதுமலை.
(C/14334)

**NEW BRIGHT கல்வி நிலையம்**
யா/மாட்டின் வீதி.

பதவி வெற்றிடம்
தரம் 1-5 வரையான வகுப்புகளுக்கு கல்வி கற்பிப்பதற்கு (எல்லாப் பாடங்களுக்கும்) ஆசிரியர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை நேரில்/ தபால்மூலம் அனுப்பவும்.
(81760) முடிவுதிகதி:- 28.12.2000

**A/L 2001 & DAY**
* ECON - PAPER
MON, THURS, 5 p.m.
Mr. இராஜேஸ்வரன் B.com
A/L 2002
* CHE. - Mr.KARAN
* PHY. - Mr. ஸ்பெல்மன்
* C/MA - Mr. தவசேகர்
Gr.6 முதல் O/L வரை
**SHAMROCK**

**ராஜா யாழ்ப்பாணம்**
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா,
விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
**வாலி**
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
(C/14247)

**நாகம்ஸ் சுன்னாகம்**
விஜய், ஜோதிகா நடித்த
S.J.சூர்யாவின்
**குஷி**
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
நாளை முதல்
**சுதந்திரம்**
(81710)

# WANTED

Graduates to teach Physics in the Advanced Level classes.
Applications Should be Forwarded to reach the Principal before 20th December 2000.

**PRINCIPAL**
Chundikuli Girls' College,
Jaffna.
(C/14331)

## துயர் பகிர்கின்றோம்

We Serve

எமது கழகத்தின் ஆரம்பப் பொருளாளரான

**லயன் T.சச்சிதானந்தன்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்துடன் இணைந்து துயர்பகிர்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

லயன்ஸ் கழகம்,
மானிப்பாய் வட்டம்.
(81764)

# மரண அறிவித்தல்கள்

## சகோதரி குளோறி சண்முகம்

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" *II தீமோத்தேயு. 4:7*

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த சகோதரி குளோறி சண்முகம் அவர்கள் நேற்று (16.12.2000) சனிக்கிழமை பி.ப 2.45 மணிக்கு மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இல111, கண்டி வீதியில் இருக்கும் இலங்கை பெந்தெ கொஸ்தே சபைச் சாலையில் நாளை (18.12.2000) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெற்று அதன் பின் கொட்டடிச் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் பட்டு நல்லடக்க ஆராதனை நடைபெறும் என்பதை யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
இலங்கை பெந்தெகொஸ்தே சபை

*111, கண்டி வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(T.P 2339) (81766)

## திருமதி டெய்சி சவரிமுத்து

பண்டத்தரிப்பு பொந்தி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி டெய்சி சவரிமுத்து 16.12.2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்புக்குட்டி சவரிமுத்துவின் அன்பு மனைவியும் லெற்றீஷியா ஜெயமலர் (சுவிஸ்), நெல்சன் ஜெயக்குமாரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.சவரிமுத்து
(கணவர்)

*பொந்தி ஒழுங்கை,*
*பண்டத்தரிப்பு.*
(81765)

## வேலுப்பிள்ளை மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகாலிங்கம் நேற்று (16.12.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், யோகரத்தினம் (ஜேர்மனி), யோகநாதன் (சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்), சிவநாதன்(ஜேர்மனி), லலிதா(சுவீடன்), ஜெயமலர், தேவாஜினி (ஜேர்மனி), கைலாயநாதன் (டென்மார்க்), வாசுதன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கவடிவேல் (ஜேர்மனி), சுகிர்தா, உமாராணி(ஜேர்மனி), சுதந்திரராசா(சுவீடன்), பன்னீர்செல்வம்(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்), சதாசிவம் (ஜேர்மன்), நாகநந்தினி (டென்மார்க்), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஜா, வசந்தருபன், தர்ஷிகா, மதுரிகா, சிந்துஜன், பிந்துஜன், சியானுஜா, இளங்குமரன் ,இளவரசன், சிந்துஜா, நிராஜ், சதீஸ், அனோஜ், ஹரிராம், ரிஷிராம், சிஷிராம், லாவண்யா, கவின் ஆகியோரின் அன்புப்பேரனும், சானுஜனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2000) ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
ம.யோகநாதன் (மகன்)

தற்காலிக முகவரி:-
*ஆடியபாதம் வீதி,*
*(உடையார் ஒழுங்கை)*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(81763)

நிரந்தர முகவரி:-
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

## வேலுப்பிள்ளை தனபாலரத்தினம்

வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை தனபாலரத்தினம் பத்தர் கொழும்பில் காலமானார்.

அன்னார் பவளரத்தினத்தின்(பவளம்) அன்புக் கணவரும் ராகுலன் (நோர்வே), கிர்சன்(நோர்வே), துசித்தா(அமெரிக்கா) தனுஷா(நோர்வே), தர்மா(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.நாகரத்தினம்
(மைத்துனி)

*1010/3, கே.கே.எஸ்.றோட்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(81775)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## இயற்கையின் தண்டனை!

விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் விதைத்த நெல்வயல்களில் இப்போது கட்டாக்காலிகள் இரை தேடுகின்றன — மேய்கின்றன. சில இடங்களில் வயல் சொந்தக்காரர்களே தமது கால் நடைகளைக் கட்டி மேய விடுகிறார்கள்!

இனிமேல் மழை வரும் என்ற நம்பிக்கை அற்றுவிட்டது. அதனால் பல இடங்களிலும் நெல் வயல்கள் கைவிடப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் குடாநாட்டில் நெல்லின்—அரிசியின் —விலை உயரப் போகிறது. கொழும்பிலிருந்து கப்பலில் வரும் அரிசியையே முழுக்க முழுக்க நம்பியிருக்க வேண்டிய தங்கு நிலை உருவாகிறது.

மழை பொய்த்து விட்டதே என்பதற்காக இயற்கையைத் தண்டிக்க முடியுமா? தண்டிக்கப்படவேண்டியவன் மனிதனே — மக்களே.

இயற்கை தந்த செல்வங்களை மனிதன் துஷ்பிரயோகம் செய்கிறான். தனது சுயதேவைகளுக்கு — சுயநலன்களுக்காக இயற்கையைத் தீண்டுகிறான்; சீண்டுகிறான்; சுரண்டுகிறான். இந்தக் குற்றங்கள் ஒன்று திரளும்போது, இயற்கை பல விதங்களில் — பல வகைகளில் — மனிதனைத் தண்டிக்கிறது அத்தகைய தண்டனைகளில் மழை தவறிப்போவதும்—வான் பொய்ப்பதும் -- ஒன்று.

மக்கள் மத்தியில் மனித தர்மங்களும் நீதிகளும், அறங்களும், நற்பண்புகளும், நல்லியல்புகளும், அருகி வருகின்றன. அக்கிரமங்களும் அநியாயங்களும் அராஜகங்களும் அதர்மங்களும், தெய்வ நிந்தனையும் பெருகுகின்றன. அதனாலும் இயற்கை மனிதனைத் தண்டித்திருக்கிறது எனலாம்.

குளங்கள், அணைக்கட்டுகள் வாய்க்கால்கள் உரியமுறையில் பேணப்பட்டு, நீர் தேக்கப்பட்டால், மழை பொய்க்கும்போது விவசாயம் பாதிப்புறாமல் தடுக்கலாம். வானம் பார்த்த பூமியாயினும் எமது முன்னோர்கள் குளங்கள், கேணிகள், தோண்டி நீரைத் தேக்கி மழை பொய்த்த காலத்திலும் விவசாயம் செய்தனர்.

அவற்றை இடைக்காலத்தில் கைவிட்டு விட்டோம். குளங்களைத் தோண்டிக் கட்டுவதில் அக்கறை செலுத்தப்படவில்லை. அவை தூர்ந்து போகாமல் தடுப்பதில் கூட கவனம் செலுத்தப்பட்டது மிகக் குறைவு. ''மில்க்வைற்'' கனகராசா போன்ற ஒரு சில தேசப்பற்றாளர்களே அதில் ஆர்வம் காட்டினர்.

நீண்ட காலத்திற்கும் பின்னர்புதிதாக ஒரு குளம் தோண்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு கடந்த வாரம் சங்கரத்தையில் இடம்பெற்றுள்ளது. வழுக்கை ஆற்றுப் படுக்கை பிரதேசத்தில் இக்குளத்தை நிர்மாணிக்க உழைத்த சகலரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ''முதலியார் குளத்தை'' முன்னுதாரணமாகக் கொண்டு மேலும் பல குளங்களைக் குடாநாட்டில் தோண்டி, வீணே கடலில் கலக்கும் மழை நீரைத் தேக்க பிரதேச நலனில் அக்கறையுள்ளோர் முன்வர வேண்டும்.

ஆலயங்களில் அளவுக்கு அதிகமான செலவுகளைச் செய்து வெளிநாட்டுப் பணத்தைச் செலவிடாமல், கிராமத்துக்கு ஒரு குளமும் நான்கு கேணிகளும் புதிதாகத் தோண்டி மழை நீரைத் தேக்க முடியாதா?

குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மழை நீரைத் தேக்கும் நீர்ப்பாசன முறையை விருத்தி செய்வதில் அக்கறை கொள்வது அவசியம்.

---

# நல்ல தலைவர்களாகத் திகழ்வதற்கு நல்ல தலைவரைப் பின்பற்றுவோம்!

'தலையுள்ளவர்களெல்லாம் தலைவர்களல்ல' என்பது முதுமொழியாகும். அவ்வாறெனில் - நல்ல தலைவர்கள் என்பவர்கள் யார்? அவர்களில் காணப்படவேண்டிய, காணப்படக்கூடாத தன்மைகள் எவையெவை? இயேசுக் கிறிஸ்து தலைவர்களுள் நாம் பின்பற்றக்கூடிய மிகச்சிறந்த தலைவர் எனும் ரீதியில் அவரில் காணப்பட்ட குணங்களை ஆராய்ந்தால், இக் கேள்விக்கான விடை எளிதில் கிடைத்து விடும்.

இயேசு நல்ல தலைவர்; ஏனெனில் மக்களோடு மக்களாக வாழுகிறார். திருமுழுக்கு என்பதை அவர் பெறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர் இறைமகன். ஆனாலும் போதிக்கும் நல்ல பாதைக்கு வழி நடத்தும் ஒருவர் மற்றவர்கள் எதைச் செய்ய வேண்டும் எனஎதிர்பார்க்கிறாரோ, அதை மற்றவர்களுக்கு முன் மாதிரியாகச் செய்து காட்ட வேண்டும் எனும் தலைமைத்துவப் பண்பை இயேசு இங்கு நிறைவேற்றி நல்ல தலைவராக உயர்கிறார். தான் அன்பு கூர்ந்த மார்த்தாள், மரியாள் என்பவர்களது குடும்பத்தில் லாசர் இறந்த பின்பு அங்கு செல்கின்ற இயேசு அவன் இறந்ததற்காகக் கண்ணீர் விடுவதைக் காண்கிறோம். அவர்களது குடும்பத்திலே தன்னையும் ஓர் அங்கத்தவராக இணைத்துக் கொண்டு, அவர்கள் கொள்கின்ற துயரத்திலே தானும் பங்கு கொண்டு மக்களின் தலைவராக விளங்குகிறார்.

இயேசு நல்ல தலைவர் ஏனெனில் தாழ்மையின் ஆண்டவராக விளங்கினார். மாடமாளிகையில் அல்லாது அவரது பிறப்பு, துர்நாற்றம் வீசுகிற, அழுக்கு நிறைந்த மாட்டுத் தொழுவத்திலேயே நிகழ்ந்தது. தான் மற்றவர்களின் பணியாளன் என்பதைக் காட்டுவதற்காக தனது இடுப்பில் துணியைக் கட்டிக்கொண்டு ஏனையோரின் பாதங்களைக் கழுவினார். நாம் இன்று பார்க்கும் பெரும்பாலான தலைவர்கள் போல கவர்ச்சிகரமான உடை உடுத்தி, நறுமணங்களை உடலிலே தெளித்து, 'தம்மை விட்டால் ஆள்களில்லை'

### ஞாயிறு நற்பிரசாதம்

என்று 'திரிகின்ற' தலைவர்கள் போல் அல்லாமல் எளிமையாக அலைந்து மக்களுக்கு நிலவும் குறைகளைத் தீர்த்து வைக்கின்றார் இயேசு.

பசியோடு வாடியவர்களுக்கு நல்ல உணவு தந்தார், நோய்களில் வேதனைப்பட்டவர்களுக்கு அதிலிருந்து மீள வழிகாட்டினார், கண்ணீரில் மிதந்தவர்களுக்கு ஆறுதல் தந்தார். இதன் மூலம் பலரது மனதில் தலைவராக நிலைத்து நின்றார். நிற்கிறார். இன்னும் நிற்பார்.

இயேசு நல்ல தலைவர் ஏனெனில், தனது புகழ் பரம்ப வேண்டும் என்பதற்காக, தனக்காக ஆள்களைச் சேர்த்துக் கொண்டு, மற்றவர்களைப் புறம்பே தள்ளவில்லை. மாறாக இறைமக்களாகவும். நல்வாழ்வு நாடுபவர்களாகவும், மக்களை மாற்ற வேண்டும் என்பதற்காகவுமே அவர் ஊழியம் செய்பவராகச் சுற்றித்திரிந்தார். அவரது போதனைகள் யாவும் தற்புகழ்ச்சிப் போதனைகளல்ல. மாறாக நற்பிரசைகளாக மக்களை மாற்றத் துடிக்கும் ஒரு நல்ல தலைவனின் போதனைகளாகவே அமைந்தன. சீடர்களுள் யார் பெரியவர் என்கிற வாக்குவாதம் நிகழ்ந்த போது, 'சிறுபிள்ளையையும் ஏற்றுக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்' என இயேசு சொல்வதனூடாக, மக்களுக்குத் தலைவராக விரும்புபவர் சிறியோர், பெரியோர் எனும் வேறுபாடின்றி அனைவரையும் ஏற்றுக் கொள்பவராகத் திகழ வேண்டும் என்பதே இயேசுவின் போதனையாக அமைந்தது.

அவரைப் பின்பற்றியவர்களுள் ஒருவர் வந்து வேறு யாரோ உமது ஊழியம் போல் ஊழியம் செய்கிறார் என்று இயேசுவைப் பார்த்துக் கூறிய போது, இயேசு அதைக்குறித்துக் கண்டனம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆகவே இயேசு 'நான்' எனும் மமதையற்ற; பொறாமையற்ற; நாங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய உன்னத தலைவராகின்றார். யோவான் என்கிற திருமுழுக்குநரும், இயேசுவும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசாமல், கடவுள் தந்த பொறுப்புகளில் ஒருவரை ஒருவர் தாங்குவதனூடாக, நல்ல தலைவர்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு உதாரணபுருடர்களாக விளங்குகின்றனர்.

இயேசுக் கிறிஸ்து தவறு விடுபவர்களைத் தண்டித்து, தனக்கு நல்ல பெயர் எடுக்கும் ஒரு சாதாரண தலைவராக இல்லாமல், ஏனையோர் திருந்தி வாழ சந்தர்ப்பம் கொடுக்கின்ற ஈடிணையற்ற தலைவராகவும் விளங்குகின்றார். சமூகத்தில் பாராமுகமாக இருந்த விபசாரிகள், பாவிகள், நோயுற்றோருக்கு திருந்தி வாழ சந்தர்ப்பம் கொடுத்து நல்வாழ்வுக்கு வித்திடுகின்றார்.

அருள் திரு.
பி. தேவதாஸ்

போதனைகள் மூலம் புகழ் பெறும் சாதாரண தலைவர்கள்போல எமது கிறிஸ்து இல்லாமல் போதனைகளை சாதனைகளாக்கி, போதிப்பது மட்டும் போதாது. அவற்றை சாதித்துக்காட்டுவதும் முக்கியம் எனும் சிந்தையை நிகழ்காலத் தலைவர்களுக்குக் கொடுக்கின்றார். எனவே தலைவர்கள் சொற்களிலல்ல, வாழ்வு மூலம் நல்ல தலைவர்களாக விளங்கவேண்டும் என்பதே இயேசுகிறிஸ்து தமது வாழ்வு மூலம் எமக்குத் தரும் செய்தியாகும். அவர் போன்று நாமும் நல்ல தலைவர்களாக வாழ முயற்சிப்போமா? சிந்திப்போம்! செயற்படுவோம் !! ★

---

### வலிகாமம் தெற்கில்

## 13 லட்சம் ரூபா செலவில் பல அபிவிருத்தித் திட்டங்கள்

வலிகாமம் தெற்கு டிசெ.17

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் இவ்வருடம் 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்வித்துறை, சமயத்துறை சார்ந்த பல அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் தெரிவித்துள்ளார்.

இவ்வருட முடிவுக்குள் பின் வரும் நடைமுறைத் திட்டங்கள் குறிப்பிட்ட பணத் தொகையில் பூர்த்தி செய்யப்பட உள்ளதாகவும் அவற்றின் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிக்கப்பட்ட திட்டங்களும் அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்களும் வருமாறு;-

**கல்வித்துறை**

★ கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கட்டடம் திருத்தல்— ஒரு லட்சம் ரூபா.

★ ஏழாலை சென். இசிதோர் றோ. க. பாடசாலை வகுப்பறைகள் அமைத்தல் — ஒன்றரை லட்சம் ரூபா.

★ தாவடி இந்து தமிழ்க் கலவன்பாடசாலைக்கட்டடம் அமைத்தல் — ஒன்றரை லட்சம் ரூபா.

★ உடுவில் அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலை அலுவலகக் கட்டடம் அமைத்தல் — ஒன்றரை லட்சம் ரூபா.

★ சுன்னாகம் றோ. க. பாடசாலை வகுப்பறைகளுக்கு வலை அடித்தல் — ஒரு லட்சம் ரூபா.

★ புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலைக் கட்டடம் அமைத்தல் — ஒன்றரை லட்சம் ரூபா.

★ சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலைக் கட்டடம் அமைப்பு—ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ புதுமடம் றோ. க. பாடசாலைக் கட்டடப் புனரமைப்பு —ஒரு லட்சம் ரூபா.

★ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் கட்டடத்திருத்தம் — ஒரு லட்சம் ரூபா.

**சமயத்துறை**

★ கந்தரோடை ஞான வைரவர் ஆலய கட்டடத் திருத்தம் —75 ஆயிரம் ரூபா

★ மயிலணி சிவன் ஆலய புனரமைப்பு — ஒரு லட்சம் ரூபா. (ஐ-152)

---

### நாளை

**மார்கழி 03**
**திங்கட்கிழமை**

திதி: அட்டமி
முன் இரவு 10.48 வரை.
நட்சத்திரம்: உத்தரம்
பின் இரவு 12.26 வரை.
சுபநேரம்: 12.23-1.53
ராகுகாலம்: 7.53 - 9.23
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

---

### உதயவாக்கு

நல்லொழுக்கத்துக்கு இடம் என்றுமே தேவையிருப்பதில்லை.

= செனேகோ

---

### இன்றைய நடப்பவை

யாழ். லயன்ஸ் கழகமும் திவக லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மருத்துவ பரிசோதனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சாவல்கட்டு மகாத்மாகாந்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்,

இலவச கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனையுடன் கண்ணாடிகள், சிறுடைகளும் வழங்கப்பட இருக்கின்றன. (இ-30)

★ ★ ★

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் 16 ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1. 30 மணிக்கு கொற்றாவத்தை அ. மி. த. க. பாடசாலை அரங்கில் கா. செல்வச்சோதி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் செ. சிறினிவாசனும் கௌரவ விருந்தினர்களாக அறவழி நிலையத்தின் தலைவர் ஜி. தங்கவேல், அறவழி நிலையத்தின் கௌரவ செயலாளர் கே. ஜீவகதாஸ், அறவழி நிலைய திட்டஇணைப்பாளர் திருமதி உஷாதேவி - செல்வச்சோதியும் சிறப்பு விருந்தினர்களாக- சர்வோதய செயற்றிட்ட அத்தியட்சகர் வீ. சங்கரப்பிள்ளை, வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை- சத்தியசீலன், கொற்றாவத்தை அ.மி த.க. பாடசாலை அதிபர் பா. வெற்றிவேல், சமரபாகு கிராம அலுவலர் த. நேர்த்திசானந்தனும் கலந்து கொள்வர். நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(இ-31)

---

## தாவடியில் சாரதாதேவி ஜயந்தி தினம்விழா

யாழ்ப்பாணம், டிசெ. 17

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் அன்னை ஸ்ரீசாரதாதேவி ஜெயந்தி தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் தாவடி காந்தி கலை வளர்ச்சி மன்றத்தில் நடைபெறும்.

(ம-10)

## திவ்ய பிரபந்த உரை

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் கல்யாண மண்டபத்தில் வாராந்தம் நடைபெறும் திவ்ய பிரபந்த உரைகளின் வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணிக்கு யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் 'திருமங்கையாழ்வார்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

(ம-5)

## டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

வலி. மேற்குப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 30 மணிக்கு வலி. மேற்கும் பிரதேச சபையின் சுழிபுரம் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு சனசமூக நிலையப் பிரதிநிதிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். [இ-3]

# அறிவித்தல்

## யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலையில்

23 வருடங்களாக சேவையாற்றி ஓய்வுபெறும்
மதிப்புக்குரிய

## திரு. ம. இரத்தினசிகாமணி

ஆசிரியர்

அவர்களுக்கு பழைய மாணவர்களாகிய நாம் பிரியா விடை வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல் இன்று (17-12-2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். ஆகவே அனைத்துப் பழைய மாணவர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பழைய மாணவர்கள் சார்பில்
ச. செந்தூரன்.

(81751)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் பொன்னம்பலம் தர்மலிங்கம்

மலர்வு
18-01-1926

உதிர்வு
18-11-2000

சீரான சிறப்பான வாழ்வு தந்த தெய்வமே!
என்னை வாலிழந்த பட்டம் போல் -வையமதில்
பரிதவிக்க விட்டுச் சென்ற தேனோ?...
கண்ணினை இமை காப்பது போல் காத்து
எம்மை பண்பிலே, படிப்பிலே, பதவியிலே
சிகரமாய்த் திகழ வைத்த எங்கள் அப்பாவே;
கண்மூடித் திறப்பதற்குள் கண்மூடிய
மாயமென்னவோ?

கடந்த 18.11.2000 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் பொன்னம்பலம் தர்மலிங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு விரைந்து வந்து, எமக்கு வேண்டிய உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்ட விவசாயபீட மாணவ ஒன்றியத்திற்கும், அனுதாபச் செய்திகளை தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுப்பியோருக்கும், இடம்பெயர்ந்திருந்த வேளையிலும் சகல வழிகளிலும் உதவி புரிந்த எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நாளை திங்கட்கிழமை [18--12-2000]** நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இடம்பெயர்ந்து இருப்பதன் காரணமாக ஊரவர் வதிவிடங்களை அறிவதில் உள்ள சிரமத்தால் இவ் வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகக் கருதிக் கொள்ளவும்.

— குடும்பத்தினர்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
(வைரவ கோயில் அருகில்)

(81759)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 17
இம் மாதம் 15 ஆம் திகதி வரையும் பயண அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(161647ஏ), (161647பி),
(161647சி), (161743ஏ),
(164064ஏ), (164274ஏ),
(166517ஏ), (166733ஏ),
(166733பி), (166848ஏ),
(166848பி), (166848சி),
(170067ஏ), (170131ஏ),
(170132ஏ), (170132பி),
(170325ஏ), (170325பி),
(170397ஏ), (172837ஏ),
(173169ஏ), (173171ஏ),
(173172ஏ), (173173ஏ),
(173177ஏ), (174715ஏ),
(174715பி), (174715சி),
(175157ஏ), (175165ஏ),
(175165பி), (175165சி).

### கோப்பாய்

(145519ஏ), (145519பி),
(145519சி), (153514ஏ),
(153514பி), (156934ஏ),
(162605ஏ), (162605பி),
(163671ஏ), (163671பி),
(163675ஏ), (163676ஏ),
(163676பி), (163676சி),
(163676டி), (163838ஏ),
(163838பி), (168194ஏ)
(168238ஏ), (168238பி),
(168239ஏ), (168239பி),
(168239சி), (168246ஏ),
(168251ஏ), (168251பி),
(168306சி),
(168307ஏ), (168307பி),
(168324ஏ), (168324பி),
(168330ஏ), (168331ஏ),
(168360ஏ), (168388ஏ),
(168388பி), (168423ஏ),
(169194பி), (173212ஏ),
(173212பி), (173212சி),
(173212டி), (173212ஈ),
(173232ஏ), (173232பி),
(173254ஏ), (173254பி),
(173258ஏ).

### நல்லூர்

(158533ஏ), (158533பி),
(169393ஏ), (169393பி),
(169404ஏ), (170318ஏ),
(170319ஏ), (172896ஏ),
(172896பி), (172896சி),
(172896டி), (172896ஈ),
(172896எப்), (172896ஜி),
(172979ஏ), (172980ஏ),
(172980பி), (173056ஏ),
(173056பி), (173099ஏ),
(174718ஏ), (174718பி),
[174718சி], [174718டி],
[175137ஏ], [175163ஏ],
[175163பி], [175163சி],

### சண்டிலிப்பாய்

[163966ஏ], [163966பி],
[163966சி], [164351ஏ],
[165449ஏ], [165449பி],
[165542ஏ], [165542பி],
[165700ஏ], [166766ஏ],
[166922ஏ], [169429ஏ],
[169429பி], [169429சி],
[170017ஏ], [170017பி],
[170076ஏ], [170083ஏ],
[170087ஏ], [170087பி],
[170087சி], [170087டி],
[170220ஏ], [170220பி],
[170220சி], [170220டி],
(170222ஏ), (170222பி),
(170222சி), (172819ஏ),
(172839பி), (172821ஏ),
(172827பி), (172976ஏ),
(172992ஏ), (173058ஏ),
(173048பி), (173058சி,
(173059ஏ), (173059பி),
(173078ஏ), (173078பி),
(173078சி), (173078சி),
(173078டி), (173170ஏ),
(175152ஏ), (175152பி),
(175152சி), (175164ஏ),
(175164பி), (175194ஏ):

### தெல்லிப்பழை

(169068ஏ), (173022ஏ),
(173154ஏ), (174733ஏ),
(174733பி), (174734ஏ),
(147734).

### உடுவில்

(166598ஏ), (169172ஏ),
(169172பி), (170109ஏ),
(170267ஏ), (170267பி),
(170267சி), (170267டி),
(170267ஈ), (170288ஏ),
(170288பி), (170288சி),
(170289ஏ), (170289பி),
(170289சி), (170312ஏ),
(170316ஏ), (170316பி),
(170316சி), (170371ஏ),
(170371பி), (170371சி),
(170371டி), )170371ஈ),
(170721ஏ), (170721பி),
(172811ஏ), (172811பி),
(172892ஏ), (172892பி),
(172892சி), (172993ஏ),
(173057ஏ), (173061ஏ),
(173115ஏ), (173162ஏ),
(173162பி), (174723ஏ),
(174723பி), (174787ஏ),
(174787பி) (174787சி),
(174787டி), (174800ஏ),
(174800பி), (174831ஏ),
(175070ஏ), (175109ஏ),
(175124ஏ), (175142ஏ),
(175142பி), (175212ஏ).

(ஐ-10)

# வவுனியா மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 17
யாழ். பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 4.30 மணிக்கு வர்த்தக விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார்.

(ஐ-6)

# முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள்

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 5 முன்பள்ளிகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்கள் தம்பாட்டி, காந்திஜி முன்பள்ளி நாரந்தனை, அண்ணா முன்பள்ளி, அனலைதீவு அருணோதயா முன்பள்ளி, எழுவைதீவு புனித தோமையார் முன்பள்ளி, புளியங்கூடல் சின்னமடு முன்பள்ளி என்பவற்றிற்கு கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

(ஐ-16)

# யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

கட்டடப் பொருள்கள் வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்திற்குப்பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நாகர் கோயில் மணல் | - 30 கியூப் |
| 2. | 1½ '' கல்லு | - 01 '' |
| 3. | 3/4 '' சல்லிக்கல்லு | - 06 '' |
| 4. | ½ '' சல்லிக்கல்லு | - 01 '' |
| 5. | 9 '' கல்லு | - 04 '' |
| 6. | அத்திவாரக் கல்லு | - 15 '' |

மேற்குறிப்பிடப்பட்ட பொருள்களை வழங்கக் கூடியவர்கள் தமது கேள்விகளைப் பின்வரும் ஒழுங்கிற்கமையச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி:
27-12-2000 — நண்பகல் 12 மணி.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:
28-12-2000 — நண்பகல் 12 மணி.

கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரமும் திகதியும்:
28-12-2000 — பிற்பகல் 02 மணி.

1. கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாய் இருக்க அனுமதிக்கப்படும்.
2. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 250 செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. மீளப்பெறக் கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2500 செலுத்தி இதற்கான பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும். அல்லது "யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ—து)" என்ற பெயருக்கு பிறப்பிக்கப்பட்ட வங்கி ஆணை/ காசுக் கட்டளையை இணைக்கலாம்.
4. கேள்விப் பத்திரங்களின் மீது எடுக்கப்படும் முடிவு கேள்விச் சபையினது இறுதி முடிவாகும்.
5. கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்பவர்கள் தமது கடித உறையை அரக்கு முத்திரையிட்டு கேள்விப்பத்திர கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டடப்பொருள்கள் வழங்குவதற்கான கேள்வி' எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது சங்கத்திலிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் இடுதல் வேண்டும். நேரடியாக ஒப்படைத்தல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

திரு. நா. இராசகுரு
பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

[சி/14327]

# பிறரிடம் குற்றம் காணா உயர்ந்த வாழ்வை இறைவனிடம் கேட்ட அன்னை சாரதாதேவி

**இன்று அன்னை சாரதா தேவியின் ஜெயந்தி தினமாகும். சுவாமி தபஸ்யானந்தர் எழுதிய "ஸ்ரீ சாரதாதேவி வாழ்க்கையும் உபதேசங்களும்" என்னும் நூலில் இடம்பெற்றுள்ள ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.**

குருதேவரின் மறைவு அன்னையின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கியது. அவர் குருதேவரின் மறைவை மிகவும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார். "ஓ! அன்னை காளியே! என்னை விட்டுப் போய்விட்டாயா?" என்று உருகினார். குருதேவரின் மறைவால் இதயம் கனத்துக் கொண்டிருப்பினும் அன்னை கண்ணீர் விடவில்லை. பூதவுடலைத் தீக்கிரையாக்கியபின் இந்து விதவையைப் போன்று அன்னையும், மங்கல அணிகளாகிய தங்க வளையல்களைக் கழற்றிவிட்டு, தாம் அணிந்திருந்த புடைவையின் சிவப்புக் கரையைக் கிழிக்க முற்பட்டார். அப்பொழுது குருதேவர் அன்னைக்குக் காட்சி கொடுத்து, "என்ன செய்கிறாய்? நான் எங்கே போய் விட்டேன்? ஓர் அறையினின்று மற்றொரு அறைக்கு போவது போன்று போய் இருக்கிறேன், அவ்வளவே" என்று கூறினார். துயருற்றுக் கலங்கிய அன்னையின் மனதிற்கு இந்த அனுபவம் ஆறுதலை அளித்தது. பிறப்பு, இறப்பு இவற்றைக் கடந்தவர் குருதேவர் என்பதை இந்த அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து கொண்ட அன்னை, தாம் நித்திய சுமங்கலி என்பதை அறிந்து தமது இறுதிக் காலம் வரை மங்கல அணிகளாகிய வளையல்களையும் மெல்லிய கரையுடன் கூடிய புடைவையையும் அணிந்து வந்தார்.

குருதேவரின் மகா சமாதிக்குப் பின் இரண்டு வாரங்கள் கழித்து, காசிப்பூர் வீடு காலி செய்யப்பட்டதால் குருதேவரின் இல்லறச் சீடராகிய பலராம் போஸ் என்பவரின் வீட்டில் அன்னை வசித்தார். இரண்டு வாரங்களுக்குப் பின் துன்பத்தைத் துடைப்பதற்காகவும் புனித யாத்திரை செய்வதன் பொருட்டும் பயணம் மேற்கொள்ளப்பட்டது. குருதேவரின் சீடர்கள் பலரும், குருதேவரின் அண்ணன் மகள் லட்சுமி மற்றும் கோலாப்மா முதலியவர்களும் அன்னையுடன் சென்றனர். காசி, அயோத்யா போன்ற இடங்களுக்குச் சென்றபின் பிருந்தாவனத்துக்கு வந்து அங்கு ஓர் ஆண்டுக்காலம் தங்கினர். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது பிருந்தாவனத்தில் தங்கியது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கு அன்னைக்கு ஆன்மீக அனுபூதிகள் பல கிட்டின. கண்ணன் தன்னை பிரிந்து போனதும் ராதை அந்த பூமியில் கண்ணனை எண்ணி நைந்துருகியது அனைத்தும் அன்னையின் நினைவுக்கு வந்தன. அதேபோன்று தாமும் குருதேவரைப் பிரிந்து இருக்கும் நிலையைப் பற்றி எண்ணினார் அன்னை. இதுவரை குருதேவரின் இழப்பினால் மறைந்து கிடந்த சோக உணர்வுகள் பயங்கரமான வேகத்துடன் மனதில் அலை மோதின.

பிருந்தாவனத்திற்கு வந்த ஆரம்பக் காலங்களில் இரவும் பகலும் குருதேவரின் நினைவே அன்னையை வாட்டி வதைத்தது. எந்த நேரமும் கண்ணீர் விட்டபடியே இருந்தார். அன்பும் வேதனையும் உச்ச நிலையில் கலந்த இந்த மனநிலை பல நாள்கள் நீடித்தன. இதனால் அன்



னையின் உடல் நோய்வாய்ப்பட்டு உருக்குலையத் தொடங்கியது. அப்போது அருமையான காட்சி ஒன்று கிட்டியது. குருதேவர் காட்சி கொடுத்து, 'ஏன் நீ இவ்வாறு அழுது துடிக்கிறாய்? நான் எங்கே போய் விட்டேன்? ஓர் அறையில் இருந்து மற்றொரு அறைக்குத்தானே சென்றிருக்கிறேன்' என்று மீண்டும் கூறினார். குருதேவரின் இந்தக் காட்சியும் ஆறுதலான சொற்களும் அன்னையின் துயரத்தைக் குறைத்தன. குருதேவர் தம்முடனேயே இருப்பதை சிறிது சிறிதாக உணர ஆரம்பித்தார் அன்னை. குருதேவரைப் பிரிந்ததால் ஏற்பட்ட துயரம், இப்பொழுது அவர் தம்முடன் இருப்பதாக உணர்ந்ததால அமைதியையும் ஆனந்தத்தையும் அன்னைக்கு நல்கியது.

பிருந்தாவனத்தில் வசித்த காலத்தில் அன்னைக்குப் பல ஆன்மீக அனுபவங்கள் கிடைத்தன. ஆனால் அன்னை அதனைப்பற்றி யாரிடமும் கூறவில்லை. ஆயினும் சில, அன்னையுடன் வந்தவர்களின் கண்களுக்குத் தப்பவில்லை. ஒரு நாள் அன்னை ஆழ்ந்த சமாதியில் மூழ்கியிருப்பதை யோகின்மா கண்டார். இறைவனின் நாமத்தை வெகுநேரம் பல முறை அன்னையின் காதுகளில் உச்சரித்தும் அன்னைக்கு உடல் உணர்வு உண்டாகவில்லை. அதன் பின் சுவாமி யோகானந்தர் அதே முறையில் அன்னையைப் புற உலக நினைவிற்குக் கொண்டுவர முயன்ற போது சிறிது நேரத்திற்குப் பின் அன்னைக்கு அரைகுறையான விழிப்பு நிலை வந்தது. ஸ்ரீராம கிருஷ்ணர் ஆழ்ந்த சமாதியிலிருந்து மனதைப் புற உலக நினைவிற்கு கொண்டு வருவதற்காக, 'நான் ஏதாவது சாப்பிட வேண்டும்' என்று கூறுவது வழக்கம். அதேபோன்று அரைகுறை விழிப்பு நிலையில் அன்னையும் 'நான் ஏதாவது சாப்பிட வேண்டும்' என்றார். குருதேவரைப்போன்றே அன்னையும் சிறிதளவு இனிப்புகளை உண்டார். வெற்றிலை போடும் பொழுது அதன் காம்பை குருதேவர் எப்படிக் கிள்ளி எறிவாரோ அதே போன்று அன்னையும் எறிந்தார். அந்த மன நிலையில் இருக்கும் பொழுது, அன்னையிடம் சுவாமி யோகானந்தர் பல கேள்விகள் கேட்டார். குருதேவா பதில் கூறுவது போலவே அன்னை அந்தக் கேள்விகளுக்குப் பதில் உரைத்தார். பின்பு அன்னை தாம் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உணர்விலேயே ஐக்கியப்பட்டு விட்டதாகக் கூறினார். பிருந்தாவனத்தில் தங்கியிருந்த பொழுது குருதேவர் அன்னையின் திருமுன்னர் தோன்றி சுவாமி யோகானந்தருக்கு தீட்சை கொடுக்கும்படி கூறினார். சுவாமி யோகானந்தருக்கும் குருதேவர் காட்சி கொடுத்து அன்னையிடம் மந்திர தீட்சை பெற்றுக்கொள்ளும்படி கூறினார். அதனால் அன்னை சுவாமி யோகானந்தருக்கு பிருந்தாவனத்தில் வைத்து மந்திர தீட்சை நல்கினார்; சமாதி நிலையை தொடக்கக் கூடிய மிக உன்னதமான மனநிலையில் இருந்தவாறே தீட்சை அளித்தார். ஹரித்வார் முதலிய இடங்களுக்குச் சென்ற பின் அன்னையும் மற்றவர்களும் 1887 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கல்கத்தா திரும்பினார்கள். ☆

# மணிமண்டபம்

## சிந்திப்பது எப்போது?

இரும்புக் கம்பியால் அவனுடைய உடம்பு முழுவதும் அடித்தார்கள -

அலுமினியக் குடத்தினால் அவனுடைய தலையில் அடித்தார்கள் -

பொலித்தீன் பையில் மிளகாய்த் தூளையும் பெற்றோலையும் கலந்து, கண்களிற் கட்டினார்கள் -

கைகளையும் கால்களையும் கட்டிவிட்டுத் தண்ணீர்த் தொட்டிக்குள் அவனைத் தூக்கிப் போட்டார்கள்-

கால் பெருவிரல்களின் நகங்களைப் பிடுங்கி எடுத்தார்கள் -

அந்தக் காயங்களில் ஊசிகளைக் குத்தினார்கள் - கூரிய அலவாங்கை நிலத்திற் குத்திப் புதைத்துவிட்டு, அதன் கூர் நுனியின் மேல் அவனை இருக்கச் செய்தார்கள் -

விளைவு?

அவனுடைய உடம்பு முழுவதும் ஒரே இரத்தக் காயங்கள்! சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறத் தொடங்கியது! மல வாசல் குதத்திலிருந்தும் இரத்தம் வெளியேறத் தொடங்கியது!

இந்த நிலையில் -

அவனுக்குத் தெரியாத மொழியிலே தட்டச்சுச் செய்யப்பட்ட பத்திரமொன்றிலே கையெழுத்திடுமாறு அவன் நிர்ப்பந்திக்கப்பட்டான்!

மறுத்தால், இவற்றைவிடக் கொடூரமான பல சித்திர வதைகளுக்கு உட்பட வேண்டிவரும் என்ற பயம் காரணமாக -

என்ன எழுதப்பட்டிருந்தது என்பதைப் பற்றி ஒன்றுமே விசாரிக்காமலேயே தன் கையொப்பத்தை இட்டான்! தான் ஒரு குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான்!

இது -

தமிழகத்திற் கடந்த சில ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்டு வரும் தமிழ்த் திரைப்படங்களில் இடம்பெற்று வரும் மாமூலான காட்சி அல்ல!

திகிலூட்டும் மர்மத் தொடர்கதைகளிற் புகுத்தப்படும் பயங்கரச் சம்பவமல்ல!

சர்வாதிகார நாடுகளில் சர்வ சாதாரணமானவையாகக் கருதப்படும் நடைமுறைகளின் நேர்முக வர்ணனையும் அல்ல!

இலங்கை ஜனநாயகக் குடியரசில் அமைந்துள்ள காவல் நிலையங்கள் - தடுப்பு முகாம்கள் - சிறைச்சாலைகள் சிலவற்றில் நடைபெற்றுவரும் சித்திரவதைகளின் தொகுப்பு .இது.

துணிவுடனும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற தூய நோக்குடனும் நீதிமன்று ஒன்றிலே இந்த விவரங்களை வெளியிட்டவர் தமிழ் இளைஞர் ஒருவர்!

அவசரகாலச் சட்டத்தின்படி கைதாகி - சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு - மூன்றாண்டுகள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு -

"விடுதலைப் புலிகள் இயக்கத்திற் சேர்ந்து, ஆயுதப் பயிற்சி பெற்று, பூநகரி முகாம் தாக்குதலில் ஈடுபட்டு, இராணுவத்துக்கு உயிர்ச் சேதத்தை ஏற்படுத் தியதென்ற" - குற்றச்சாட்டை, நிர்ப்பந்தம் காரணமாக ஒப்புக்கொண்டு கைச்சாத்திட்டு, நீதிமன்றினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் இளைஞர் அவர்.

நீதியரசரைப் பொறுத்தவரை, கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவைப்படவில்லை!

இளைஞனுடைய இதயக் குரலிற் தொனித்த சத்தியத்தின் ஒளியிலே -

சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள், அதை "சாட்டை"யாக்கி அப்பாவிகளைக் கொடுமைப்படுத்துவது "பளிச்"சிட்டது!

தனக்குத் தெரியாத மொழியிலே - சிங்களத்திலே - தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில், தாங்க முடியாத சித்திரவதை காரணமாகவே அந்த இளைஞன் கையொப்பமிட்டான் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்ட நீதியரசர் அவன எவ்விதமான குற்றத்தையும் செய்யவில்லையென்றும் கூறி அவனை விடுதலை செய்தார்!

வவுனியா நீதிமன்றிலே நடைபெற்ற வழக்கு விசாரணை பற்றிக் கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகைய விவரங்களை வெளியிட்டுள்ளது!

இது எங்கோ - எப்போதோ நடக்கும் "தனித்த" ஒரு சம்பவம் அன்று!

வெறும் சந்தேகத்தின் பேரில் - ஊகத்தின் பேரில் தமிழ் இளைஞர்கள் திடீர் திடீரென்று கைது செய்யப்படுவது சிறைக்குள் தள்ளப்படுவதும், சித்திரவதையால் சிலர் 'காணாமற்' போவதும், நீண்டகால இழுத்தடிப்புக்களின் பின் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது, குற்றவாளிகள் அல்லர் என அவர்கள் விடுதலை செய்யப்படுவதும் -

"புதினம்" என்ற நிலையில் இருந்து "வழமை" என்ற போக்கிற்கு வந்துவிட்டன!

தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல, பிரபல அரசியல் தலைவர்கள் சிலரும், அனுபவம்மிக்க நிர்வாக அதிகாரிகளும் கூடக் கைது செய்யப்பட்டு - சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு - விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்!

பல நூற்றுக்கணக்கானோர் விசாரணையுமின்றி - விடுதலையுமின்றி - அடிப்படை வசதிகளுமற்ற சிறைக்கூடங்களில் ஆண்டுக் கணக்காக அடைத்து வைக்கப்பட்டும் இருக்கிறார்கள்!

தமிழர்களாகப் பிறந்ததைத் தவிர வேறு குற்றம் எதுவும் செய்யாத இத்தகைய பலர் சிறைக்குள் இருந்து சீரழிவதற்கும் சித்திரவதைகளாற் செத்துக் கொண்டே போவதற்கும் அடிப்படையாகவும் தூண்டுகோலாகவும் இருப்பது -

மாதந்தோறும் நாடாளுமன்றத்திற் புதுப்பிக்கப்படும் அவசரகாலச் சட்டம்!

சில்வாவைத் தவிர்த்துவிட்டுச் செல்லையாவைச் சந்தேகிக்கவும், பெரேராவை தவிர்த்துவிட்டுப் பெரிய தம்பியைச் சந்தேகிக்கவும் தூண்டும் இந்தச் சட்டம் -

குற்றம் செய்யாதவர்களைக் குற்றவாளிகளாகச் சோடிப்பதற்கு வசதியளிக்கும் இந்தச் சட்டம் -

சித்திரவதை செய்வோர் எவ்வித தண்டனையையும் பெறாது பாதுகாப்பாக இருக்கத் துணைபோகும் இந்தச் சட்டம் -

மாதாந்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறுகிறது. தமிழர்களுக்கும் போர்நிறுத்தம் இப்போது எவ்வளவு அவசியமோ, அவசரகாலச் சட்டத்தை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்படுவதும் அவசியம்.

வடக்கு - கிழக்கை மட்டுமன்றி மலையகத்தையும் சேர்ந்த தமிழ் எம்.பிக்கள் எல்லோரும ஒன்று சோநதால் அதனைத் தோற்கடிக்கலாம்.

இது குறித்து தமிழ் எம்.பிக்கள் சிந்திப்பது எப்போது?

**சித்தன்.**

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## HAPPY BIRTHDAY

### 17-12-1999 - 17-12-2000



## செல்வன் ப.சனோஜன்

தெல்லிப்பழை விளிசிட்டியைச் சேர்ந்த திரு.ப.பஞ்சவர்ணேஸ்வரன் (பஞ்சு), யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச்சேர்ந்த திருமதி ப.விஜிதா (விஜி) தம்பதியரின் செல்வப் புதல்வன் சனோஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை கனடாவிலுள்ள தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்கா மற்றும் உறவினர், நண்பர்களுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வடலியடைப்பில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சுளிபுரத்தில் வசிக்கும் சித்தப்பா, சித்தி மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களும், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் ஆயகலைகள் அறுபத்துநான்கும் கிடைக்கப் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென் வாழ்த்துகின்றனர்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*
(81620)
***பொ.பழனிநாதன்***
***(அப்பப்பா)***

## குளோபல் பப்ளிகேசன்ஸ்
## மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் வெளிவந்துவிட்டன!

- பேராசிரியர் ஜே.கே.பி.ஆரியரத்னா (இரசாயனவியல் பேராசிரியர், களனிப் பல்கலைக்கழகம்) இரசாயனவியல் பல்தேர்வு வினாக்கள் விடைகளுக்கான விரிவான விளக்கங்களுடன் 1997 இலிருந்து பகுதி I (ரூபா 200/=)
- பேராசிரியர் ஜே.கே.பி.ஆரியரத்னா (இரசாயனவியல் பேராசிரியர், களனிப் பல்கலைக்கழகம்) இரசாயனவியல் பல்தேர்வு வினாக்கள விடைகளுக்கான விரிவானவிளக்கங்களுடன் 1997இலிருந்து பகுதி III (ரூபா 160/=)
- திரு.ஏ.கருணாகரன் - பௌதிகவியல் - சடப்பொருளின் இயல்புகள் (ரூபா 120/=)
- திரு.ஏ.கருணாகரன்- பௌதிகவியல் - சடப்பொருளும் கதிர்ப்பும் (ரூபா 90/=)
- திரு.ஏ.கருணாகரன்- பௌதிகவியல் - இலத்திரனியல் (ரூபா 180/=)
- திரு.கு.றெ.ஜெயக்குமார், சு.நிமலன், ப.ர்விராஜன் ஆகியோரின் பௌதிகவியல்- இலத்திரனியல் (ரூபா 200/=)
- திரு. சிவானந்தநாயகன் - பௌதிகவியல் - ஓகஸ்ட் 2000 வினாத்தாள் மற்றும் மாதிரிவினாத்தாள் விளக்கமான விடைகளுடன் (ரூபா155/=)
- திரு.வே.சண் - பொருளியல் பகுதி II (ரூபா200/=)
- திரு.எஸ்.கே.பிரபாகரன் - கணக்கியல் - கம்பனிக்கணக்கு (ரூபா160/=)
- திரு.எம்.மனோகரன் - இந்துநாகரிகம் - (ரூபா120/=)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்ணம், - சுற்றாடற்கல்வி - தரம் 6 (ரூபா65/=)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்ணம் - விஞ்ஞானம் - தரம் 9 (ரூபா75/=)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்ணம் - கணிதம் - தரம் 6 (ரூபா80/=)
- செல்வி விக்னேஸ்வரி செல்வநாயகம் - தமிழ்மொழி - தரம் 7 (ரூபா55/=)

கிடைக்கும் இடம்:
**சிவன் மாளிகை**
106,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2998.
(C/14256)

### சமுர்த்தி செயலணிக் கூட்டம்

காரைநகர் வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவு சமுர்த்தி செயலணியின் நிர்வாகக்குழு தெரிவுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு காரைநகர் முல்லை இளைஞர் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு காரைநகர் வடமேற்கு சமுர்த்திச் செயலணி உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு காரைநகர் வடமேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (ஐ-73)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.17

குடாநாட்டில் காணாமற்போனோர் விடயத்தில் யாழ்.அரச அதிகாரிகள் காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவது தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (இ-3)

### விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட டிசெம்பர் மாதக் கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பௌதிகத்துறை மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் யாழ்பல்கலைக் கழக விவசாய இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ந.ஞானவேல்ராஜ் 'யாழ்.மாவட்டத்தில் கண் மூடித்தனமான நைதரசன் பசளைப் பாவனையால் ஏற்படும் தீங்குகள்' என்னும் பொருளில் உரையாற்றுவார். (ஐ)

### மத்தியஸ்தர் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.17

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கு முன்னோடியான பரீட்சைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

காலை 9 மணிக்கு உடல்திறன் காண் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து எழுத்து மூலப் பரீட்சையும் இடம் பெறும். (இ-3)



பருத்தித்துறை
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில்
தூய அன்னை ஸ்ரீ. சாரதாதேவியின்

## 148ஆவது ஜன்ம தினம்

அனுஷ்டிக்கப்படுகிறது.

**17-12-2000**

காலை : 5.30 ஆராதனை
பகல் : விசேடபூஜை, பஜனை, பிரசாதம்
மாலை : 4.30 சிறப்பு நிகழ்ச்சிகள்

1. தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் கையடக்க நூல் வெளியீடு.
2. "இந்துக்களின் விழாக்கள் வருடத்தில்" வீடியோ கஸெட் வெளியீடு. தயாரிப்பு - ராஜன் வீடியோ, பருத்தித்துறை.
3. சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமய சமரச கோயில் திறப்பு விழாவின் பக்தி ததும்பிய பாடல்கள் கொண்ட வீடியோ கஸெட் காண்பிக்கப்படும்.

ஜன்ம தினமன்று பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலைமன்றத்துக்கு "சிறுவர்களுக்கான நூல்கள்" இம்மன்ற போஷகர் திரு.அ.சோமசுந்தரம் பிள்ளை அவர்களிடம் வழங்கப்படும்.

அனைவரும் அன்னையின் அருள் பெறுக!

(C/14315) - செயலாளர்.

## விற்பனையாளர் தேவை

சங்கானையில் இயங்கும் Fancy கடைக்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை. சொந்தக் கையெழுத்துடனான சுய விவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
**விளம்பர இல. 1158,**
**மே/பா உதயன்.**
(81656)

## Simas

**MARGARINE**

## சீமாஸ் மாஜரின்

வாங்கிப் பாருங்கள்
மிகவும் வசதியானது
விலை சகாயமானது
பாவித்தல் சுலபமானது




- கேக் தயாரிக்க
- பான் தயாரிக்க
- பனிஸ் தயாரிக்க
- பிஸ்கட் (குக்கீஸ்) தயாரிக்க
- சமையலுக்கு
- தாளிப்பதற்கு
- பாணில் தடவி உண்பதற்கு

கொலஸ்டரோல் அற்றது
ஹலால் செய்யப்பட்டது

☆ பக்கெட்டை திறந்த சில நாள்களின் பின் குளிரூட்டியில் வைப்பது நல்லது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரொக்கிஸ்ட்
ரூபா பன்முக வர்த்தகம்
104,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேர்ண்ஸ ஃபில்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
124, டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை.
தொலைபேசி:731658-1 ஃபக்ஸ்:731662, 717969

சீமாஸ் மாஜரின்
*வசதியானது... சுவையானது... சத்துள்ளது*

(C/14313)

பொதுசன நூலகம்

# வளர்ந்து வரும் வெளிநாட்டு மோகம்; யாழ்ப்பாணத்தில் மிஞ்சப்போவது யார்?

*யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட முழு நிலா நாள் கருத்தரங்கில் 'நேற்று இன்று நாளை' என்னும் தலைப்பில் முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உரையாற்றினார்.*

*அவரின் உரையின் தொகுப்பு இங்கே பிரசுரிக்கப்படுகிறது. யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.வி. குகதாசன் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.*

**வே**ற்று நாகரிகத்தின் மோகத்தில் அள்ளுண்டுபோய் தமிழினம் தவித்துக்கொண்டிருக்கிறது. மாய வலையில் சிக்கி எமது கலை கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களை நாம் இழந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் எமது இனம் அலைந்துகொண்டிருக்கின்றது.

கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் காலப்போக்கில் தமிழை மறந்துவிடுவார்கள் போல் இருக்கின்றது.

அம்மா, அப்பா என்று தமிழ் குழந்தைகள் பெற்றோர்களை அழைக்கும் நிலை மாறி மம்மி, டடி என்று அழைக்கத் தொடங்கியுள்ளனர். தமிழில் பல அந்நியச் சொற்கள் புகுந்துவிட்டன. எங்கும் எதிலும் தமிழைக் கண்ட எமது பரம்பரையினர் இன்று தமிழ்ப் பண்பாட்டு பழக்கவழக்கங்களைக் கைவிடும் நிலைக்கு ஆளாகி வருகிறார்கள்.

மிகப் பழமை வாய்ந்த எமது தமிழுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைவது எங்கனம்?

இன்று முப்பத்து மூன்றுக்கு மேற்பட்ட நாடுகளிலே ஈழத் தமிழர்கள் பரவி வாழ்கின்றனர். அங்கெல்லாம் தமிழர் கலை கலாசாரங்களை பேணிக் காக்க வேண்டிய நிலை உருவாகி வருகின்றது.

போயா டே, றவுண்டப், பங்கர், ஷெல் போன்ற பல ஆங்கிலச் சொற்கள் தமிழ் மொழியிலே இன்று சாதாரண மாகப் புகுந்துவிட்டன.

அதுமட்டுமன்றி தமிழர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு ஆங்கிலம் மற்றும் வேற்று மொழியிலான பெயர்களைச் சூட்டுவதையே எம்மவர்கள் நாகரிகமாகக் கருதுகிறார்கள்.

டுக்சி, டைசா எனக் குழந்தைகளுக்கு நாமம் சூட்டப்படுகின்றது.

பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்துவிட்டால் பூப்புனித நீராட்டுவிழா என்ற பெயரில் இலட்சக்கணக்கான ரூபாக்களை வீண் விரயம் செய்கின்றனர். பத்திரிகைகளிலும் இது தொடர்பான அழைப்பிதழ்களைப் பிரசுரிக்கிறார்கள்.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை வாழ்த்தியும் பாராட்டியும் புதினப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இதுகூட நாகரிகமாகப் போய்விட்டது.

வெளிநாட்டு மோகத்தினால் எமது இனத்தின் கல்வித்தரம் குறைந்துகொண்டே போகின்றது.

இங்கே அரசியல் கூடாரக் கடையாகவும் பாடசாலை கேலிக்கூத்தாகவும் பல்கலைக்கழகம் மதிப்புக் கெட்டும் போய்விட்டது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 18 பேராசிரியர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் 3 பேராசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இதனால் மருத்துவக் கல்லூரியை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

4 இலட்சம் மக்களுக்கு 12 கண் டாக்டர்கள் தேவை. ஆனால் இங்கு ஒரு டாக்டரே கடமையாற்றுகின்றார்.

நாக்கு, காது, தொண்டை வைத்திய நிபுணர்களும் பல மகப்பேற்று டாக்டர்களும் கடமையாற்ற வேண்டிய இடத்திலும் ஒரு சில மருத்துவர்களே கடமையில் உள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள், மொத்தமாக ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வெளிநாடுகளுக்கும் என யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுகின்றன.

தொடர்ந்து இவ்வாறு மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தால் இங்கு மிஞ்சப்போவது யார்?

வெளிநாடுகளில் உள்ள தமது பிள்ளைகளுடன் வாழச்சென்ற பெற்றோர்கள் அங்கு முழுநாளும் அறைகளிலே முடங்கிக் கிடக்கும் சிறை வாழ்க்கையை வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு எப்பொழுது திரும்புவோம்? நல்லூர்க் கந்தன் ஆலய சுற்றாடலில் காலாற எப்போது நடமாடுவோம் என்று ஆதங்கப்படுகிறார்கள் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்த யாழ்ப்பாணவாசிகள்.

வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் இருக்கும் தொலைத் தொடர்பு நிலையங்களுடன் தொடர்புகொண்டு ஆலய பூசையின் போது ஒலிக்கும் மணி ஒலியைத் தொலைபேசியில் கேட்டு அங்கிருந்துகொண்டே அப்பனே முருகா என்று தோப்புக்கரணம் போட்டு வழிபடுகிறார்கள்.

தமிழருடைய பண்பாட்டுப் பாரம்பரியங்கள் வேறு எந்த இனத்திலும் காண முடியாதவை.

எமது கலை, பண்பாட்டு பழக்க வழக்கங்களை கட்டிக் காத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டும். இல்லாதுவிட்டால் தமிழரின் கலை, கலாசாரம் அழிந்துவிடும்.

அன்று முழு நிலா நாளிலே காதலர்கள் கூடிக் குலவி மகிழ்ச்சியாக இருந்தார்கள். காதலுக்கும் நிலாவுக்கும் அவ்வளவு தூரம் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

நிலாவைப் பற்றியே கவிஞர்கள் எத்தனை பாடல்களைப் பாடியுள்ளனர். அது மட்டுமா? முழு நிலாவிலே தான் கோயில் திருவிழாக்கள், பாட்டுக் கச்சேரிகள், கலை நிகழ்வுகள், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து என விடியவிடிய விழா நடத்தி மகிழ்ச்சியில் திளைத்தவர்கள் நம்மவர்கள்.

இன்று இவை எல்லாம் இயலாத காரியங்கள் ஆகிவிட்டன. எமது இளைஞர்கள் இரவு 9 மணிக்கு இன்று வீதியில் நடமாட முடியுமா? அவ்வாறு நடமாடினால் என்ன நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவ்வாறான ஒரு சூழலில் எமது கலை, கலாசாரத்தை வளர்ப்பது எங்கனம்? பாதுகாப்பது எப்படி?

திருப்பள்ளி எழுச்சி பாடி, சேவல் கூவி நித்திரைவிட்டு எழும்பிய காலம் மாறி ஷெல்லடி கேட்டு காலையில் நித்திரைவிட்டு எழும்பும் நிலை ஏற்பட்டுவிட்டது.

உலக நாடுகள் பலவற்றிலும் விடுதலைக்கான போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. அதேபோன்று எமது மண்ணிலும் விடுதலைப் போராட்டம் நடைபெறுகின்றது.

விடுதலைக்காகப் போராடும் எமது இனத்துக்கு சுதந்திரம் கிடைப்பது நிச்சயம் என்று நம்பவேண்டும். கருக்கொண்டது என்றோ ஒருநாள் வெளியே வரத்தானே வேண்டும். எனவே எவராலோ எப்படியோ எமது இனத்துக்கு சுதந்திரம் கிடைப்பது உறுதியாகிவிட்டது.

**தொகுப்பு: கேசரி**

பெற்ற குழந்தைகள் வெளிநாட்டிலே; இங்கே பெற்றோர்களின் மரண வைபவத்தினை நடத்துபவர்கள் இடையே போட்டியும் மோதல்களும். மரண நிகழ்வுகள் பற்றிய தகவலையும பத்திரிகைக்கு வழங்கியவருக்கு, கொள்ளிவைத்தவருக்கும் இடையில் வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் அனுப்பிவைக்கும் பணத்தை பகிர்ந்து எடுப்பதிலே பிரச்சினை.

பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் தான் கொள்ளி வைக்கவேண்டும் என்ற எமது பண்பாட்டுப் பழக்க வழக்கம் மாறிவிட்டது.

குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் மெழுகுதிரி கொளுத்தி அதனைக் குழந்தைகளைக் கொண்டே அணைத்தும் விடுகிறார்கள். மங்கள விளக்கேற்றி விழாக்களை நடத்தும் நாம் ஏன் பிறந்தநாள் விழாக்களில் விளக்கினை அணைக்கிறோம்? இதுவும் எமது பண்பாடுகளில் இல்லாத ஒரு செயலாகும்.

எமது மக்கள் இன்று படுகின்ற அவல நிலையில் ஆலயங்களில் கோபுரங்களும் கட்டடங்களும் இன்று அவசியமா? சிறப்பு மிக்க ஆலயங்களைக் கொண்ட தென்மராட்சியில் இன்று எத்தனை ஆலயங்கள் அழிந்து போயுள்ளன. நீதிமன்றங்களிலே இன்று பராமரிப்பு வழக்குகளே அதிகமாக நடைபெறுகின்றன. 18 வயதுக்கும் 21 வயதுக்கும் உட்பட்ட இள[illegible] பெண்கள் குழந்தைகளுடன் நீதி[illegible]றங்களில் காணப்படுகின்றனர். [illegible]களைத் திருமணம் புரிந்தத[illegible] கூறப்படும் சில நபர்கள் வாழ்ந்து[illegible] ஏமாற்றிச் சென்றுள்ளனர். இது[illegible]றைய மிகப்பெரிய சமூகப் பிரச்சி[illegible]களில் ஒன்றாக மாறிவிட்டது.

தமது குடும்பத்தில் இற[illegible]ளின் மரண நிகழ்வினை ந[illegible] யாத ஏழ்மை நிலையில் இ[illegible] பலர் வாழ்கின்றனர்.

இறுதிக்கிரியைகளை நட[illegible] யாத வறுமை நிலையில் அ[illegible]வில் சடலங்களை அடக்க[illegible] கிறார்கள்.

நான் நீதிபதியாகக் கடமை[illegible]றியபோது இவ்வாறு இறுதிக்கி[illegible] நடத்த முடியாத சிலர் அரச செ[illegible] தமது குடும்ப உறுப்பினரின் ச[illegible]த்தினை அடக்கம் செய்யுமாறு கேட்டுள்ளனர்.

இவ்வாறு வறுமைநிலையில் எம்மவர்களில் ஒரு சாரர் தவித்துக்கொண்டு இருக்கும் போது வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தில் கோயில் கோபுரங்களும், கட்டடங்களும் தேவைதானா?

எனவே இத்தகைய நிலையினைத் தவிர்த்து ஏழைகளுக்கு உதவுகின்ற மனப்பக்குவம் எம்மவருக்கு ஏற்பட வேண்டும். அப்போதுதான் நாம் மனிதர்களாக, உண்மையான தமிழர்களாக வாழ முடியும். ★

# துளசிச் செடிகள் உள்ள இடங்களை எவ்வகை நுளம்பும் அணுகுவதில்லை

**டெ**ங்குக் காய்ச்சல் தென் இலங்கையில் பல இடங்களிலும் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் அபாயச்சங்கு ஊதி வருகின்றனர். இது யாழ்.குடாநாட்டின் வாயிற் கதவைத் தட்டிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே அதன் தாக்கத்திலிருந்து விடுபட முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இது ஒரு தொற்று நோயாகும். மலேரியா போன்ற ஏனைய தொற்று நோய்களைத் தடுக்க, முன் கூட்டியே பயன்படுத்த மருந்துகள் உள்ளன. ஆனால் டெங்குக் காய்தலைத் தடுப்பதற்கு மருந்துகள் எதுவும் கிடையாது. அது போலவே இதனால் பீடிக்கப்பட்டால் நிவாரணம் பெறவும் மருந்துகள் எதுவும் கிடையாது. மருந்துகள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆகவே இதனால் கடுமையாகப் பீடிக்கப்பட்டவர்களை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றமுடியாது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## தடுப்பு முறை

இந்நோய் பரவுவதைத் தடுப்பதே நம்முன் உள்ள ஒரே வழியாகும். அதாவது இந்நோயைக் காவிவரும் நுளம்புகளின் உற்பத்தியைத் தடுப்பதே ஒரே வழி. வீடுகளின் வளவுகளிலும், வீதி ஓரங்களிலும் பல நாள்களுக்குத் தேங்கி நிற்கும் நீரிலிருந்து இவை உற்பத்தியாகின்றன. பழைய ரயர்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் இவ்விடங்களில் இருந்தால் அவற்றில் நீர் தேங்கிநிற்க வாய்ப்பு உண்டு. இது தவிர வீடுகளிலுள்ள தொட்டிகளிலும் நீர் தேங்கி நிற்கும் வாய்ப்பு உள்ளது.

இப்படியான ரயர்களை எரித்து விடுவதன் மூலமும், பிளாஸ்ரிக் பொருள்களை நிலத்தில் புதைத்து விடுவதன் மூலமும் தொட்டிகளில் நீர் அதிக நாள்களுக்குத தேங்காது தவிர்ப்பதன் மூலமும் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம்.

இந்த நுளம்புகள் டெங்குக்காய்தலால் பீடிக்கப்பட்ட ஒருவரின் இரத்தத்தை உறிஞ்சும்போது, நோய்க் கிருமிகளும் அவற்றின் உடலில் செறிந்து விடுகின்றன. பின்பு இவை வேறொரு மனிதனின் உடலில் இரத்தத்தை உறிஞ்சும்போது, இக்கிருமிகள் சம்பந்தப்பட்டவரின் உடலில் புகுந்துவிடும். பின்பு அவருக்கு இந் நோய் ஏற்படும்.

ஆரம்பத்தில்காய்ச்சல் இருக்கும். இவ்வாறு மூன்று நாள்கள் கழிந்த பின் 'டெங்கு' தனது சுயரூபத்தைக் காட்டும். இவ்வாறு பீடிக்கப்பட்டவர்களுக்கு இரத்தப்பெருக்கு ஏற்படும்.

காய்ச்சல் வந்தபோது அது சாதாரணமானது என நினைத்து, கடைகளில் காணப்படும் 'பனடோல்', 'டிஸ்பிரின்' ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். காய்தல் ஆரம்பித்தவுடன் ஒரு தகுந்த வைத்தியரை நாடிப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் 'டெங்குக்' காய்தல் வருவதைக் கட்டுப்படுத்த முடியும்.

**கு.சி.சுந்தரம்பிள்ளை**

## பாதிக்கும் காலம்

இந்த நுளம்புகளின் தாக்கம் ஏனைய நுளம்புகளிலிருந்து வேறுபட்டது. மலேரியா நுளம்புகள் இரவு நேரத்திலேயே காணப்படுகின்றன. ஆனால் இந்த நுளம்புகள் பகல் நேரத்தில் தான் காணப்படும்

காலை 6 மணி முதல் 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணிவரையும் இதே வகை நுளம்புகள் மனிதரைத் தாக்குவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். ஆகவே இந்நேரங் களிற் காணப்படுபவை இவ்வகை நுளம்புகள் என இனம்கண்டு கொள்ளலாம்.

நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கு துளசி ஒரு சிறந்த நிவாரணி என ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துளசிச் செடியுள்ள இடங்களை நுளம்புகள் அணுகுவதில்லை. இது சகல விதமான நுளம்புகளுக்கும் பொருந்தும். எமது மூதாதையர்கள் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபடத் துளசியைப் பயன்படுத்தியுள்ளனர் என ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் தான் முன்னைய காலங்களில் 'துளசி மாடங்கள்' அமைக்கப்பட்டிருந்ததாக அறியப்படுகின்றது.

நுளம்புகளை இப்போது டி.டி.ரீ, மலத்தியோன் போன்ற மருந்துகளினாலும் முற்றாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகவே இதனைக் கட்டுப்படுத்த துளசிச் செடியை வீடுகளில் வளர்ப்பது சிறந்த பலன்தரும். இத்துளசி மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுகிறது. உணவு சமிபாட்டுக் குறைபாடு, வாயில் துர்நாற்றம் ஆகியவற்றுக்கும் இது உடன் பலன் அளிக்கும். தினமும் மூன்று வேளை இதன் இலைகளில் 5 வீதம் மென்று தின்றுவர நல்ல பலன் கொடுக்கும். ஆகவே துளசியை வளர்த்து பயன் பெறுவோமாக!

※ ☆ ※ ☆ ※



யாழ்.திருமறைக் கலாமன்றம் அண்மையில் மூத்த கலைஞர்கள் இருவரைப் பாராட்டிக் கௌரவித்தது.

யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளரும் கலைஞருமான எஸ்.ஜெயசிங்கத்துக்கு 'கலைக்குரல்' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்துவதையும் –

கலைஞர் ஜீ.பி.பேர்மினாஸுக்கு 'அரங்க வாரிதி' என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்துவதையும் படங்களில் காணலாம்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மேற்படி இருவருக்கும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

*படங்கள்: பா.நந்தகுமார்*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

நாவற்குழியைச் சேர்ந்த சண்முகம் கணேசராஜா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 091041624) பழைய பொலிஸ் ஸ்ரேசன் ஒழுங்கை, உயரப்புலம், ஆனைக்கோட்டையில் (14-12-2000) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கு.கனகம்மா, 'பார்வதி வாசம்', உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (81746)

செல்வி வானதி செல்வரட்ணம் (ஆசிரியர்) என்பவருடைய தேசிய அ.அட்டை (687210956V), விசேட அ.அட்டை, **Job Card** ஆகிய மூன்றும் கடந்த 12-12-2000 அன்று பரமேஸ்வராச் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **No.**05, மணிக்கூட்டுக் கோபுர ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (81738)

15.12.2000 அன்று யாழ். பல்கலைக்கழக முக்கிய புத்தகங்களுடனான பாக் ஒன்று கல்வியங்காடு ஸ்ரீமுருகன் திரையரங்குக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஜெயச்சந்திரன், இராச வீதி, அச்சுவேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (81755)

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த பசுபதி கிரிதரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை(இல.710523797**v**)யும், உடுப்புப் பொதியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **V.**மயில்வாகனம் வைத்தியர், உபயகதிர்காமம், புலோலிதெற்கு முகவரியில் ஒப்படைத்து உதவவும். (81756)

பெரியரசடிவீதி, சாவகச்சேரி எனும் முகவரியுடைய திருமதி இளையதம்பி சொர்ணம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.296230154**v**), விசேட அடையாள அட்டை என்பன மணியம்ஸ் கட்டடத்துக்கும் ஸ்ரீதர் தியேட்டருக்கும் இடையில் நேற்று (16.12.2000) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 17,வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி, காரைநகர்வீதி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (81754)

## குத்தகைக்கு

நல்ல வியாபாரம் நடைபெறக் கூடிய சூழலில் உள்ள பலசரக்குக் கடை குத்தகைக்கு விடப்படும். தொடர்பு: 36, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (81737)

## விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள **Pioneer Box, Pioneer Cassette deck, N.E.C. Cassette deck, N.E.C. Amplifier, N.E.C. Tunner, Harmonium** (ஆர்மோனியம்) என்பன விற்பனைக்கு உண்டு தொடர்பு: **S.** அமலன் **18/2.** கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (81743)

## புறொயிலர் குஞ்சுகள்

எம்மிடம் புறொயிலர் குஞ்சுகளுக்குப் பதிவு செய்தவர்கள் இன்று (17-12-2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு வந்து பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: வை. சிவகுமார், இல.461, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (81749)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.; நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. தபால் மூலமும் பயிற்சி. (81731)

## காணி விற்பனைக்கு

டச்சுவீதி, அளவெட்டியில் கிணற்றுடன் கூடிய வீடுகட்டக்கூடிய 7 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல.: 01-605602. (81733)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் தபாற்கந்தோருக்கு அண்மையாக 7 1/2 நில. பரப்புக் காணி (கல்வீடும் கிணறும் கொண்டது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **E.**நடேசன், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (81709)

## புறோயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து சுத்தம் செய்யப்பட்ட பிறிமா புறோயிலர் கோழி இறைச்சி தினமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **T.**கரன், ஆஸ்பத்திரி வீதி, (கஸ்தூரியார் வீதிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.; சீனிவாச்கம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (81720)

## இறைச்சிக் கோழி

சேவல்,கல்பேட மொத்தமாகவும் சில்லறையாகவும விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (81132)

இறைச்சிக்கு உகந்த சேவல், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.15,6ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (81725)

சேவல், கல்பேட் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். நத்தார் பண்டிகையை முன்னிட்டு, தினமும் விற்பனையாகும். லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (81748)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்துப் பெற்றோர் தமது செவ்வாய் தோஷமற்ற (சுவாதி நட்சத்திரம்) பிள்ளைகளுக்கு தகுந்த மணமக்களை எதிர்பார்க்கின்றனர். மகன் (விரிவுரையாளர்) வயது 40, கிரக பாவம் குறைவு. மகள் வயது 30, கிரக பாவம் கூட. தொடர்பு: விள. இல. 1152, மே/பா உதயன். (81423)

## முகாமைத்துவப் பயிற்சி

அரசாங்கத் திணைக்களங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர் தரம் 'II ஆ' வைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் 4நாள் தொடர்ச்சியான முகாமைத்துவப் பயிற்சிநெறி யாழ். மாவட்டத்தில் தொகுதி தொகுதியாக நடைபெற்று வருகின்றது.

முதற்கட்டத் தொகுதி பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த எழுதுவினைஞர்களுக்கு இம் மாதம் 14ஆம் திகதி முதல் 4 நாள்களுக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது.

இரண்டாம் கட்ட பயிற்சிநெறி வடமராட்சி உத்தியோகத்தர்களுக்கு நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகியது.

19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் நியமனக் கடிதம் கிடைக்கப் பெறாத எழுதுவினைஞர் 'தரம் II ஆ'வைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளலாம் என பிராந்திய ஆணையாளர் து.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

மூன்றாம் கட்டமாக வலிகாமம் பிரதேச எழுதுவினைஞர்களுக்கான பயிற்சிநெறி நாளை 18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (ஐ-152)

## மாணவருக்குத் தளபாடங்கள்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நிலவும் தளபாடப் பற்றாக் குறையை நீக்குவதற்காக ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் கதிரை, மேசை போன்ற மாணவர்களுக்கான தளபாடங்களை வழங்கியுள்ளது. இங்கு இந்நிறுவனம் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு புதிய மாடிக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (ஐ-135)

# அமெரிக்கத் தூதர் வவுனியா விஜயம்

கொழும்பு,டிசெ.17

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அல்சி வில்ஸ் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார். அரசாங்க அதிபர் உட்பட பல அரச அதிகாரிகளையும் அவர் சந்தித்து உரையாடினார்.

நேற்று முன்தினம் காலை தமது மனைவியுடனும் தூதரக அதிகாரியுடனும் வவுனியாவுக்கு விஜயம் செய்த அவர் அரச அதிபருடன ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசம் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் ஆகியவற்றில் வாழும் மக்களின் நிலைமைகள், நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களின் நிலைமைகள், அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரணம், அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாகவும் -

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்கான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் தொடர்பாகவும் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாகவும் - அரச அதிபரிடம் அவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வவுனியாவிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசினார்.

வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு சென்ற அவர் அங்கு நடைபெறும் சுற்றிவளைப்புக்களின் போதும் சாதாரண நேரங்களிலும் இளைஞர் யுவதிகள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள பொதுமக்களையும் அவர் சந்தித்தார். அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் கேட்டறிந்து கொண்டார். (இ-6)

## மாதாந்த உதவிப்பணம்

வலி.தெற்கு,டிசெ.17

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு டிசெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவுகள் முன் கூட்டியே வழங்கப்பட்டுள்ளன.

பொதுசன மாதாந்தப் பணம் பெறுவோருக்கான டிசெம்பர் மாத வவுச்சர்கள் சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு விட்டன.

இக்கொடுப்பனவை பெறுபவர்கள் உடனடியாக தத்தம் தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-152)

**HOLY FAMILY CONVENT, JAFFNA.**

All Past Pupils are cordially invited to the

**"FAMILIAN HOUR"**

***celebrating this 1st Christmas of the Millenium.***

**Venue:** **School Hall**
**Date :** **23-12-2000**
**Time :** **3 p.m**

(81747) ***Past Pupils Association.***



குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்

**☛ போட்டோ பிரதிகள்**

**☛ அடையாளஅட்டை கவரிடுதல் (Lamination)**

**அருண்**

**புளொக் தயாரிப்பாளர்**

*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(C/14324)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 23 - 11 - 1927



மறைவு 17 - 11 - 2000

## திருமதி அமராவதி கனகசபை

தாழாத துயரோடு, கதறுகின்ற எங்கள் குரல்
மீளாத் துயில் கொள்ளும் உன் செவியில் கேளாதோ?
மீண்டுவர வேண்டுகின்றோம், இறைவனை துதிக்கின்றோம.
உந்தன் ஆத்மா சாந்தி பெற!!

மேற்படி அந்தியேட்டி வைபவம் இன்று (17-12-2000) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் மூத்த மகனின் (திக்கத்தில்) இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்.**

தகவல்
*பா.லோகநாயகி (பேத்தி),*
*முதலாம் கட்டை ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

(81753)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 11 - 1949



மறைவு 17 - 11 - 2000

## அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம்

அன்போடும் பாசத்தோடும் எம்மைக் காத்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.
எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும்
எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவு என்றும் அழியாது!

**ந.சிவபாலசுந்தரம்** (குடும்பம்)
**அன்ரி** (குடும்பம்)

*இல.20,கடற்கரை வீதி,*
*ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.*

(81598)

பொது ... யாழ்ப்பாணம்

# இந்த வார இராசி பலன்

## 17-12-2000 - 23-12-2000

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச் சக்கரம் | | |
| வெ | | | சந் |
| சூ கே புத | | செவ் | |

*மாற்றம்:-*

***18 - 12 - 2000 இல் பூரம்-நட்சத்திரம்-சந்திரன்-சிங்கம் இராசியில் நிற்கும்.***

**அரசியல்** — பேச்சுவார்த்தையில்– தொடர்ந்து இழுபறிநிலை ஏற்பட்டபடி இருக்கும். உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தங்கள் கொடுத்தபடி இருக்கும். திடீர்திடீரென சில அழிவுகள், யுத்தச் சம்பவங்கள் என்பன வரலாம். இந்தியாவில் அரசியலில் குழப்ப நிலை உருவாகலாம். பதற்றநிலைகளை எதிரிகள் சாதகமாக்கிக் கொள்வார்கள். மேற்கு நாடுகள் தொழில் நுட்ப உதவிகளைச் செய்வார்கள் மத்தியகிழக்கில் பதற்றம்— கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தங்கள்— ஆட்சிபீடங்களின் தலைமைப் பதவி மாற்றங்கள் சில நாடுகளில் இடம்பெறும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

சிலருக்குப் போட்டி என வந்துவிட்டால் ஒருவெறித்தனமே பிடித்து பழிவாங்கத் துடிப்பார்கள். இறுதியில் தாமே அதில் சிக்குப்பட்டு மனமொடிந்து போவார்கள். இந்த அனுபவம் உங்களுக்கு வராது பார்த்துக்கொள்ளுங்கள், தொழில் ஸ்தானத்தில் விட்டுவிட்டுப்பலன்கள் நடக்கும் காலமாகும். குடும்பத்தினரின் நன்மைகளுக்காக ஓடியாடித் திரிவீர்கள். சாதுரியமாகப் பேசிக் காரிய மாற்றுவீர்கள். புத்திரர், சகோதரங்களுக்கு நல்லது நடக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பொருள்வரவு வர இடமுண்டு. எங்கே இருந்து வரும் என்பதை தீர்மானித்துச் செயற்படுங்கள். கைகால், மூட்டுவலி, தோல் வருத்தங்கள், வயிற்றுவருத்தங்கள் என்பனவரும். பாதுகாப்புத்துறை, உணவுத்துறை, இசைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிக மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாட்கள் — புதன், வெள்ளி, சனி.

### இடபம்

பொதுத் தொண்டில் நிதானமாக இருக்க வேண்டும். பிழைகள் நடந்து சிலர் கணக்குக்கேட்டால் — கைகட்டிக் கொண்டு இருக்கவேண்டிவரலாம். உலகம் எப்பொழுதும் விழித்தபடியே இருப்பதை நீங்கள் உணரத்தவறக் கூடாது. மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயலாம் அல்லவா'' எனவே தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். எதிர்ப்பாலாரால் பல பிரச்சினைகள் வர இடமுண்டு. காலமறிந்து செயற்படுங்கள். விசாரணைகள் காத்திருப்பதை மறவாதீர்கள். இருதய வருத்தங்கள், மனப்போராட்டம், வயிற்றுவருத்தம் போன்றவை வர இடமுண்டு. தூரதேசச் செய்திகள் நன்மைகளைத் தர இடமுண்டு. கலைத்துறை, செய்தித்துறை, மருந்துத்துறை, ஆலயத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்லங்களும்— நன்மைகளும் ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்டநாட்கள்: — புதன், வெள்ளி, சனி.

### மிதுனம்

சொத்து, சொத்து என்றெல்லாம் யாருக்காகத் தேடுவது? ஓர் எல்லைக்கு மேல் எல்லாம் பூச்சியம்தான் என்ற ஞானம் உங்களுக்கு வருங்காலமாகும். கிரணசாலம் வந்தால் நஞ்சுபரவாமல் இருக்குமா? அவசரமும், ஆத்திரமும் எவ்வளவு வேதனையைத் தருகின்றது. தடியைக்கொடுத்து அடிவாங்கிய கதைபோலாகும் என்பதைப் புரியாமலா இருப்பீர்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். உங்கள் கருத்துக்களில் அபிப்பிராய பேதங்கள் வரும். எதிர்ப்பாலாருடன் தொல்லைகள் வரும். தலைவலி யோசனை, அடிகாயங்கள், உள்உறுப்புக்களில் வருத்தம், என்பனகொடுக்கும். மல்லி. தேன் பாவிக்கவும், கோயில் வேலைகள், எண்ணெய், உணவு — வியாபாரம் சம்பந்தப்பட்ட துறைகளால் ஆதாயங்கள் அடைவீர்கள்.

★ அதிர்ஷ்டநாட்கள்: — புதன், வெள்ளி, சனி.

### கடகம்

உங்களுக்கு கற்பனைவளம் அதிகம். அதனால் சிலர் விடும் தவறுகளைக் கூடக் கண்டுபிடித்துச் சொல்லி குறை கேட்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் வரவேண்டிய பொருள்வராது காலதாமதமாகும். வீடு, வாகனயோகம் சிலருக்குக் கிடைக்க இடமுண்டு. இடமாற்றங்களை

## மகாதேவா ஜோதிடம்

நிதானமாக - யோசித்துச் செய்யவும் அரச அதிகாரிகள், பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தினருடன் கோவிக்காது பொறுமையாக இருக்கவும். வாய்வு அழுத்தம், பயப்பாடு, சலவருத்தம், கலைவருத்தங்கள் என்பன கொடுக்க இடமுண்டு. தூரதேசச் செய்திகளால் ஓரளவு ஆறுதல் ஏற்படும். செய்தித்துறை, மருந்துத்துறை, சமயத்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை, அரசியல் துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி, சனி.

### சிங்கம்

துறவிக்குப் பட்டம் ஏன்? பலபேர் வாழும் மடம் எதற்கு? வட்டநிலா தெரிய பரந்த மண் வெளியிலிருந்து பாடியோ, பிரசங்கம் செய்தோ வாழலாம்தானே. எனச் சிந்திக்கிறீர்களா? உண்மைதான். ஆனால் துறவி துறவிவேஷத்தில் இருப்பவர்களுக்கு இதெல்லாம் தேவைதானே. தொழில்ஸ்தானத்திலும் சிலர் வேஷமிட்டு உண்மைகளுக்குமான கருத்துக்களைப் பரப்பி வேதனை தருவார்கள் என்பதைக் கண்டுபிடிப்பார்கள். பொருள் வரவு ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தினரிடையே கருத்துவேற்றுமை ஏற்படலாம். தொண்டைநோ, வாய்வுப் பிடிப்பு, உஷ்ணபீடைகள், காலில் அடிபட்டுச் சறுக்குதல் என்பன வர இடமுண்டு. சீனி, கோதுமை மாச்சாப்பாடுகளைக் குறைத்தால் நன்று, குருத்துறை, கோயில் துறை, மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைத் தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாட்கள்:- புதன், வெள்ளி, சனி.

### கன்னி

மக்கள் தமது பக்தியை வளர்க்க பல இலட்சம் செலவு செய்து கோவிலைக்கட்டுகிறார்கள். பக்தர்களின் வசதிக்காக இறை ஆலயங்களுக்கு மக்களும் - அரசும் கட்டடங்கள் கட்ட பல உதவிகளைச் செய்து கொடுக்கின்றனர். ஒருசிலரின் சுய நலங்களுக்காக அல்ல இதே போன்று அரசாங்கம் பல கோடிசெலவுசெய்து தொழில் ஸ்தாபனங்களை உருவாக்க உதவிசெய்து மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைச் செய்து கொடுக்கின்றது நாட்டின் அபிவிருத்திக்காக பல செய்யும். தொழிலில் நீங்களும் பலன் அடைய வழி உண்டா என ஆராய்வீர்கள். புதுமைகளில் முன்னேற வழி தேடுங்கள். நன்மைகள் கிடைக்கும். கிருமித்தாக்கம், சளி, வாதப்பிடிப்பு, இரத்த வருத்தங்கள் வரலாம். சாப்பாட்டில் மிதமாக இருக்கவும். கலைத்துறை, நகைத்துறை, சட்டத்துறை, ஆசிரியத்துறை போன்ற துறை தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி, சனி.

### துலாம்

நீதி தர்மத்திற்காக சமாதானத்துடன் செயற்பட்டுவரும் நீங்கள் — உண்மையாக உழைப்பவர்களைக் காப்பாற்றி ஒரு நல்ல வலுவுள்ள சமுதாய ஆற்றலுள்ள சமூகயந்திரத்தைக் கட்டிக் காக்க வேண்டும். அதனால் உங்களை நாடி நிச்சயம் தலைமைப்பீடம் வரும் வருங்காலத்தில் தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு நன்மைகள் ஏற்படும் அறிகுறிகள் தென்படும். அடிக்கடி சளித் தொல்லை, களைப்பு, காய்ச்சல் என்பன வரலாம். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். சக உத்தியோகத்தாகளுடன் கருத்துவேற்றுமை ஏற்பட இடம்உண்டுவியாபாரத்துறை நீதித்துறை, கோயில்துறை, ஆசிரியத்துறை, பிரயாணத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும்' நன்மைகளும் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

''என்னை அறிவித்து எனக்கருள் செய்து முன்னை வினையின் முதலைக் களைந்து'' என்றார் ஒரு பெரியார். இப்பிறவியில் நாம் கொண்டு வந்தபாவ புண்ணிய முதலைஅழித்து அந்நிலை அவனருளால் அவன்தாள் பணியும் பண்பால் தான் கிடைக்கும் என்பது உங்களுக்குப் புரியாததல்ல. எனினும் கடமையில் கண்ணாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் விட்டு விட்டு பிரச்சினைகள் கொடுக்கும். பெரியவர்களின் உதவிகள் கொடுக்கும். பணவரவு கொடுக்கும். எதிர்ப்பாலாரின் ஆதரவு உண்டு எதிரிகள்உங்களைஒன்றும்செய்யமுடியாதுதத்தளிப்பார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். தந்தை வழியினர்கள் உதவிகள் செய்வார்கள். கிருமித்தாக்கம், நாரிநோ, மூலவருத்தம், வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். சட் த்துறை, குருத்துறை, பாதுகாப்புத் துறை, இரும்பு, மருந்து போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி.

### தனுசு

ஒருவர் பொதுத் தொண்டுகள் செய்யும் பொழுது உண்மையும், பணிவும், பண்பும் மக்களுக்கு நன்மைகளும் செய்பவர்களாக இருத்தல் வேண்டும். ஆணவத் தன்மையால், அதிகாரத்தால் பிறரின் மனம். உடல்நோவடையச் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் அதிக காலம் நிலைத்து நிற்க முடியாது இதே தன்மை கொண்டு தொழில் ஸ்தானத்தில் செயற்படுபவர்கள் எல்லோரதும் அன்பைப் பெறுவார்கள். சகோதரங்கள் வேதனைப்படுவர்கள். குடும்பத்தினரிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பொருள் தொலைந்த வேதனையால் சாமியாரிடமும் — குறிகேட்பவரிடமும் சென்று காலத்தைச் செலவு செய்வீர்கள். ஊரில் நல்ல பெயர் வரும். கண்மங்கல், தடுமாற்றம், வயிற்றுநோ. சலமல உபாதைகள் என்பன வர இடமுண்டு. கோயில்வேலை, வியாபாரம், மந்திர வேலைகள், நகைவேலை, போக்குவரத்துத்துறைபோன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- புதன், வெள்ளி, ஞாயிறு

### மகரம்

பந்தம் பிடித்தாவது பரீட்சைகளில் பாஸ் பண்ணுவதற்கு சில மாணவர்கள் குறுக்கு வழிகளை நாடினால் இரவு, பகலாக படிக்கும் மாணவர்களின் நிலை என்னவாகும்? எனவே தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். வாய்ச் சாதுரியத்தால் காரியானுகூலங்கள் சாதகமாகும். வாகனம், இருப்பிடம் சம்பந்தமான மாற்றங்களுக்கு யோசனை வரும். குடும்பத்தினரிடையே வாக்குக்கலகம் கொடுக்கும். பித்த வருத்தம், மனப்பயம் மூட்டுவலி, கைகால் பிடிப்பு, வயிற்று வருத்தம் என்பன வரும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உங்களைப் பார்த்தபடி இருப்பார்கள். இடமாற்றத்தில் நிதானமாக இருக்க வேண்டும். களவு, இழப்புக்கள் வரலாம். திடீர்ச் செய்திகள் தூரதேசத் தொடர்புகள் சிலருக்கு வர இடமுண்டு. வாகனத்துறை, வியாபாரம், ஆராய்ச்சித்துறை, செய்தித்துறை. இசைத்துறை நகைத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்;- ஞாயிறு, சனி.

### கும்பம்

சோதிடம் அல்லது ஜோதிடம் பிறர் நம்புவதற்காக ஆக்கப்பட்ட கலை அல்ல. மக்கள் ஜோதி இடமிருந்து வரும் சக்தியின் ஆற்றலால் தமது வாழ்க்கையை திசை திருப்பி நற்பாதையில் செல்வதற்கு வழிகாட்ட வகுக்கப்பட்ட மார்க்கமாகும். இதைத் தவறாகப் புரிவதோ, பாவிப்பதோ அவரவரைப் பொறுத்ததாகும். தூரதேசச் செய்திகள் வரும். சகோதர உதவிகள் கிடைக்கும். சிலருக்கு இடமாற்றங்கள் வரும். கால்வீக்கம், மறதி, தோல் வருத்தம், சிரசு வருத்தங்கள் வரலாம். கஜு, முந்திரிகைவற்றல், பால், தேசிக்காய் நீர் உணவில் சேர்த்துக் கொள்ளவும். சட்டத்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, சனி.

### மீனம்

சோதிடம் பார்ப்பது தரித்திரம் என்பது ஒரு சாரார் கருத்தாகும். எந்தச் சோதிடராவது உண்மை, நீதிப்படி மக்களுக்கு உள்ளதை நயமாகச் சொல்லி நன்மையைச் செய்துவருவார்களாயின் அதனால் நன்மை, செல்வம், புகழ் அடைவார்கள். இந்நிலையை இறுதிவரையும் கடைப் பிடிக்க வேண்டும். அதே போன்று நீங்களும் உங்கள் தொழிலில் நேர்மை, உறுதி, நன்மை எனச் செயற்படுங்கள். நிச்சயம் இலாபமும் புகழும் பெற்றபடி இருப்பீர்கள். முகத்திற்காக உங்கள் கடமையை. நீதிக்கு மாறாகச் செய்யாதீர்கள். தூரதேசச் செய்தி, எதிர்ப்பாலாரின் எதிர்ப்பு என்பன வரும். புத்திரருக்கு நன்மைகள் ஏற்படும். நரம்பு வருத்தம், சளி, இடுப்புவருத்தம், வாய்வுவருத்தங்கள் என்பன வரும். பிரயாணத்துறை வியாபாரம், தோட்டம். மார்க்கட், வியாபரம், கோவில்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாட்கள்:- ஞாயிறு, சனி.

---

## ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஜனவரி 3 இல் ஆரம்பமாகும்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாகி 12 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் உயர்தர கல்லூரியில் மேற்படி மதிப்பீட்டுப்பணி காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் உதவிப் பரீட்சகர்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதிப்பரீட்சை ஆணையாளரால் (மதிப்பீடு) உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஜ-152)

## ஒன்று கூடல்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தில் தொழில் நுட்பமாணவர் சங்கத்தினரின் ஆதரவில் நாளை திங்கட்கிழமை காலை10 30மணிக்கு கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவன ஏபல் கலையரங்கத்தில் நடைபெற உள்ள மேற்படி நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் வண. ஏ. ஏ. போல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் ஜ-152)

## குடிசைகள் அமைப்பு

'கியூடெக்' நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மனித முன்னேற்ற நிறுவனம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 69 குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

காரைநகர் தெற்கில் 36 குடும்பங்களுக்கும், காரைநகர் மத்தியில் 11 குடும்பங்களுக்கும் ஊர்காவற்றுறையில் 22 குடும்பங்களுக்கும் தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

# சீனாவுடனான அமெ. உறவுகளில் கடும் போக்குக் கடைப்பிடிக்கப்படும்

## புதிய அதிபராகும் புஷ் அறிவிப்பு

வாஷிங்டன், டிசெ. 17

சீனாவுடனான அமெரிக்க உறவுகளில் கடும் போக்குக் கடைப்பிடிக்கப்படும் என்று அமெரிக்காவின் புதிய அதிபராகப் பொறுப்பேற்க உள்ள ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் தனது தோல்வியை ஒப்புக்கொண்டதை அடுத்து அமெரிக்காவின் அதிபராவது உறுதியானதும் செய்தியாளர்களிடம் பேசிய புஷ் இதனைத் தெரிவித்தார்.

எனது பதவிக்காலத்தில் சீனாவுடனான உறவுகளில்பல மாற்றங்கள் கொண்டுவரப்படும். சீனாவுக்கு அமெரிக்கா மூலம் மிரட்டல் எதுவும் இருக்காது என்றாலும் சீனாவின் ஒவ்வொரு நடவடிக்கையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படும் என்றும் புஷ் சொன்னார்.

அதேசமயம் —

தாய்வானுடனான உறவுகள் மேம்படுத்தப்படும். புறக்கணிக்கப்பட்டு வந்த ஜப்பான் — அமெரிக்க உறவுகளுக்கு புத்துயிர் அளிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சீனாவின் அதிவேக வளர்ச்சி அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று குடியரசுக் கட்சியில் உள்ள பலர் கருதுகின்றனர். அவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்தே சீனாவுடனான உறவுகளில் கடும் போக்கைக் கடைப்பிடிக்க புஷ் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

அதிபர் கிளின்ரனுடைய பதவிக் காலத்திலேயே சீனாவுடனான அமெரிக்க உறவுகள் மேம்பட்டுவந்தன. எனினும் கிளின்ரனின் இந்த நடவடிக்கை குறித்து புஷ் ஏற்கனவே கடும் கண்டனம் தெரிவித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது

(ம-7)

# இந்திய மீனவர்களைத் தாக்கும் இலங்கைப் படை மீது கண்டனம்

இலங்கைக் கடற்பரப்புக்குள் திசைமாறி நுழையும் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு இந்தியா கண்டனமும், கவலையும் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங் தன்னைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்தார்.

இத்தகைய சம்பவங்களைத் தவிர்க்கும் வகையில்இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜஸ்வந்சிங் வலியுறுத்தினார்.

இலங்கை தலைமை வகிக்கும் 'சார்க்' நாடுகள் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டைக் கூட்டுவது தொடர்பாகவும் இரு அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினர்.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பங்கேற்கும் 'சார்க்' கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என இந்தியா அறிவித்ததை அடுத்து நேபாளத்தில் நடைபெற இருந்த மாநாடு பிற்போடப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஒ)

# அமெரிக்க அதிபராகும் புஷ் எதிர்நோக்கும் முதற் சவால்

அமெரிக்காவில் அடுத்த அதிபராகப் பதவி ஏற்கப் போகும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், நிர்வாகப் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும் சவாலை எதிர் கொண்டுள்ளார்.

அமெரிக்க சட்டங்களின்படி சுமார் 6 ஆயிரத்து 500 நிர்வாகப் பதவிகளுக்கு புதிய அதிபர் ஆள்களை நியமிப்பார்.

அந்த வகையில் அதிபர் பில் கிளின்ரன் அவரது ஜனநாயகக் கட்சியினரை இந்தப் பதவிகளில் நியமித்திருந்தார்.

இப்போது கிளின்ரனுடன், அவர் நியமித்தவர்களும் பதவி விலகுகின்றனர்.

இந்தப் பதவி வெற்றிடங்களுக்கு புதிய அதிபராகும் புஷ் தனது குடியரசுக் கட்சியினரை நியமிக்கவேண்டும்.

இவற்றில் ஆயிரம் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் குறித்து செனட் ஒப்புதலை புஷ் பெறவேண்டும்.

இது வரை சுமார் 25 ஆயிரம் குடியரசுக் கட்சியினர் நிர்வாகப் பதவிகளை வகிக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்குள் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பது பல முட்டுக்கட்டைகளைத் தாண்டி அதிபராகப் போகும் புஷ் எதிர்கொள்ளும் முதல் சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ 6)

# அழகுராணிப் போட்டிக்குத் தடை

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆளும் பாரதீய ஜனதா அரசு அழகுராணிப் போட்டிகள் நடத்தத் தடை விதித்துள்ளது.

உலகின் மிகத் தொன்மை வாய்ந்த இந்தியக் கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை அழகுராணிப் போட்டிகள் மீறுவதாக மாநில அரசு குறைகூறியுள்ளது.

# 'ஹமாஸ்' அமைப்பின் ஆண்டு விழா

காஸா, டிசெ. 17

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் 'ஹமாஸ்' அமைப்பின் 13 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி காஸாவில் உள்ள 'ஜானப்' மைதானத்தில் சுமார் 30 ஆயிரம் பலஸ்தீனர்கள் ஒன்று கூடி விடுதலைக்காகப் பிரார்த்தித்தார்கள்.

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் காஸாவுக்கு விஜயம் செய்ததை 'ஹமாஸ்' அமைப்பு கண்டித்துள்ளது.

# புதுத்தம்பதியர் தேனிலவு செல்ல ஆர்.எஸ். எஸ். இயக்கம் எதிர்ப்பு

புதுடில்லி, டிசெ. 17

புதுமணத் தம்பதிகள் தேனிலவுக்குச் செல்வது, குடும்பங்கள் பிரிவதுக்குக் காரணமாவதால், தேனிலவுக்கு எதிராகப் பிரசாரம் செய்யப் போவதாக ஆர். எஸ். எஸ். இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் முன்னோடியான ஆர். எஸ். எஸ் இயக்கம், ஆதரவற்ற முதியோர்கள் பெருகி வருவதற்கும் தேனிலவே காரணம் என்று குறை கூறியுள்ளது.

தேனிலவுக்கு புதுமணத் தம்பதிகள் செல்வதால் குடும்பத்தில் இருந்தும், கடமைகளிலிருந்தும் அவர்கள் விலகி விடுகிறார்கள்.

குடும்பத்தவர்கள் தம்பதியினரின் சுதந்திரத்தில்தலையிடுகிறார்கள் என்ற அபிப்பிராயத்தை தேனிலவுக்குச் செல்வது ஏற்படுத்திவிடுகின்றது.

இதனால் குடும்பத்தவர்களுக்கும் புதுத்தம்பதிகளுக்கும் இடையே உறவில் விரிசல் ஏற்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ள ஆர். எஸ். எஸ். இயக்கம் தேனிலவு பழக்கத்தைக் கைவிடும்படி தமது இயக்கம் பிரசாரம் செய்யும் என்றும் கூறியுள்ளது

(ஒ-10)

# முன்னாள் அமைச்சருக்கு ஊழல் வழக்கில் 5 வருடச்சிறை!

சென்னை, டிசெ.17

தமிழக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு ஊழல் குற்றத்துக்காக, தனி நீதி மன்றம் 5 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

கடந்த அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் செங்கோட்டையன் போக்கு வரத்து அமைச்சராகப் பதவிவகித்தார்.

அப்போது அரசுக்குச் சொந்தமான அண்ணா போக்குவரத்துக் கழகத்துக்கு பேருந்து இருக்கைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வாங்கியதிலும், பேருந்துகளுக்கு உடற் கோப்பமைத்ததிலும், சுமார் 79லட்சம் ரூபா ஊழல் நடந்ததாக தற்போதைய தி மு. க. அரசு குற்றஞ் சாட்டியது.

இது தொடர்பாக மாநில குற்றப் புலனாய்வுத்துறை தனி நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிலேயே செங்கோட்டையனுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணையின்போது அரசுதரப்பில் 66 பேரும், எதிர்த்தரப்பில் 2 பேரும் சாட்சியமளித்தனர். (ஒ-6)

# வேலை நிறுத்தம் செய்யத் தடை

புதுடில்லி, டிசெ. 17

இந்தியத் தலைநகரான புதுடில்லிப் பிராந்தியத்தில் தபால்துறை ஊழியர்களின் வேலை நிறுத்தம், சட்ட விரோதமானது என்று கூறி மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கண்டனப் பிரேரணை தோல்வி

வாஜ்பாய் அரசுக்கு எதிராக நாடாளுமன்ற மக்கள் அவையில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த கண்டனப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை மாநிலங்களவையிலும் அரசுக்கெதிராக கண்டனப் பிரேரணை கொண்டுவரப்பட உள்ளது.

அங்கு ஆளுங் கூட்டணிக்கு பலம் குறைவாக உள்ளதால் பிரேரணை நிறைவேற்றப்படும் என்று கருதப்படுகிறது. அரசுக்கு அதனால் எந்த ஆபத்தும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாரதீய ஜனதாக் கட்சிக்கு முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை!

சென்னை, டிசெ. 17

தேசியப் பொதுத் திட்டத்தில் இருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணி வேறுபட்டால் தி.மு. க. கூட்டணியிலிருந்து விலகும் என்று பா. ஜ. கவுக்கு தமிழகமுதலமைச்சர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற ரம்ழான் நோன்பு திறக்கும் 'இப்தார்' விருந்தில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இதனைக் கூறினார்.

சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதுகாக்க தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. சேர்ந்தது அவர்களின் நலனுக்காகத் தி.மு.க. தொடர்ந்து உழைக்கும்,

இவ்வாறு கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

தி.மு.க. திரிணாமுல் காங்கிரஸ், தெலுங்கு தேசம்ஆகிய மாநிலக்கட்சிகளின் ஆதரவை பெறுவதற்காக, பாரதீய ஜனதாக் கட்சி தனது தீவிர இந்துத்துவக் கொள்கைகளை ஒதுக்கி வைத்து விட்டு, கூட்டணிக்கட்சிகள் ஒத்துக் கொண்ட விடயங்களை மட்டும் தேசிய பொதுத்திட்டமாகக் கொண்டுள்ளது.

சமீபத்தில் பிரதமர் வாஜ்பாய் பாமர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டுவதற்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டது கூட்டணியில் உள்ள மாநிலக் கட்சிகளுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஒ-6)


## மரண அறிவித்தல்

### நாகேந்திரன் ஜீவா (றொபின்)

(லக்ஷ்மி அச்சக ஊழியர்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமான நாகேந்திரன் ஜீவா (றொபின்) அவர்கள் 15-12-2000 அன்று அகால மரணமானார். இவர் திரு. சி. நாகேந்திரன் (நடராசா) திருமதி மேரி ரபேக்கா தம்பதிகளின் புதல்வரும், ஜொன்சன்றைன், டன்சன், லக்ஷ்ஷி, கௌஷி ஆகியோரின் அன்பு அண்ணனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17—12—2000) ஞாயிற்றுக்கிழமை பொரளை பாணி றேமன்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 2-00 மணிக்கு பொரளை கனத்தை பொது மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

அதிபர் (லக்ஷ்மி அச்சகம்)

195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13.

தொ. பேசி 448545, 078-664942 (81757)


### சுதந்திரப் போரைத் தூற்றிய

# பாகிஸ்தானியத் தூதரக அதிகாரி 'ஏற்றுக் கொள்ள முடியாத நபர்'

## பங்களாதேஷ் அறிவிப்பு

பங்களாதேஷ் அரசு, பாகிஸ்தானியத் துணைத் தூதுவரை 'ஏற்றுக் கொள்ள முடியாத நபர்' என்று அறிவித்தது.

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்களாதேஷ் சுதந்திரப் போரை பங்களாதேஷுக்கான பாகிஸ்தானியத் துணைத்தூதர் இஸ்மான் ராஜா தரக்குறைவாக விமர்சித்திருந்தார்.

அவரது பேச்சு பங்களாதேஷில் பரவலாகக் கண்டனத்துக்குள்ளாகியிருந்தது.

பங்களாதேஷ் அரசும் அவர்மீது கடும் அதிருப்தியை வெளியிட்டது. இதனால் பாகிஸ்தான் இஸ்மான் ராஜாவை திருப்பி அழைக்க ஒத்துக்கொண்ட போதிலும், அவர் செல்ல மறுத்தார்.

இந்த நிலையில் இஸ்மான் ராஜாவை ''ஏற்றுக்கொள்ள முடியாத நபர்'' என்று அறிவித்த பங்களாதேஷ், அவர் நாட்டைவிட்டு வெளியேற 24 மணிநேர அவகாசம்அளித்தது.

மேற்படி அறிவிப்பை அடுத்து, நேற்று முன்தினம் இரவு இஸ்மான்ராஜா பங்களாதேஷிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்.

பிறநாட்டு ராஜாங்க அதிகாரி ஒருவரை ஏற்றுக் கொள்ள முடியாத நபராக பங்களாதேஷ் அறிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

1971 ஆம் ஆண்டு நடந்த 9 மாதகால விடுதலைப்போரின் பின்னர் பங்களாதேஷின் ''முக்திவாஹினி' விடுதலைப் படைமற்றும் இந்தியராணுவம் இணைந்து கூட்டுப்படையிடம் பாகிஸ்தான் ராணுவம் சரணடைந்ததை பங்களாதேஷ் நேற்று தேசிய தினமாகக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# இறை பணியில் பொன்விழா காணும் அருட் சகோதரி கில்டா

காலஞ்சென்ற வைத்தியகலாநிதி சுப்பிரமணியத்திற்கும் செல்லம்மாவிற்கும் ஏழாவது பிள்ளையாக 1927 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆம நாள் பருத்தித்துறையில் பிறந்தவர் தான் சிவக்கொழுந்து. சைவ மதத்தை முழுமையாக அனுசரித்துவரும் ஓர் உததம குடும்பத்தில் பிறந்து - வளர்ந்த தமது அன்புச் சகோதரி கத்தோலிக்க மதத்தைத தழுவிய ஒரு கன்னிகையாக வருவாளென்று கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்கள். இவ்வாரம் 19 ஆம் நாள் அருட்சகோதரி கில்டா சுப்பிரமணியம் தன்னுடைய இறைபணி வாழ்வில் 50 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் பேறு அந்தக் குடும்பத்தில் இன்று உயிரோடு இருக்கும் ஒரு சகோதரிக்கு மாத்திரம் கிட்டியது.

கலாநிதி சுப்பிரமணியம் அனுராதபுரம் வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்தபோதும் அவருடைய பிள்ளைகள் யாழ்நகரிலேயே கல்வி பயின்று வந்துள்ளனர். இளம் சிவக்கொழுந்து தன்னுடைய ஆரம்பக் கலவியை பருத்தித்துறை ஹாட்லிக் கலலூரியில் ஆறாம் ஆண்டுவரை பயின்று பின்னர் தனது ஏழாவது ஆண்டை இருமொழிப் பாடசாலையில் ஆரம்பித்தார்.

பருவமடைந்த சிவக்கொழுந்தை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஜே.எஸ்.சி.வகுப்பில் சேர்த்துவிட பெற்றோர் விரும்பினர். ஆனால் அந்நேரத்தில் அப்பாடசாலையில் இடம் காலியாக இருக்கவில்லை. ஆனால் அதன் அதிபர் தலைவிக்கு இப்பிள்ளை இறைவனால் அனுப்பப்பட்டவர் என்ற உணர்வு ஏற்பட்டது. அதனால் சிவக்கொழுந்தை இளவாலை தி.கு.க.மடத்தில் சேர்த்துவிட்டார்.

1945 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 28 ஆம் நாள் இளவாலை மடத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நாள்முதல் ஒரு புது உணர்வு அவள் மனதில் சுடர்விட ஆரம்பித்தது.கத்தோலிக்க பின்னணியில் வளர்ந்துவந்த சிவக்கொழுந்திற்கு தான் ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஆவல் வலுவடைந்தது. அதன்படி 1946 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 23 ஆம் நாள் இளம் சிவக்கொழுந்து திருமுழுக்குப் பெற்று அலோய்சியா டொலறோசா என்று பெயர் மாற்றமும் பெற்றார்.



திருமுழுக்கு மூலம் ஒரு கத்தோலிக்க குடும்பத்தில் தன்னை இணைத்துக் கொண்டமையிட்டு தான கத்தோலிக்ச்ச் ...ரு முழுமையாக அனுட்டிக்கலாமென்று பூரிப்படைந்து

## 'அன்புவிழி'

கொண்டவேளை அவளுக்கோர் அதிர்ச்சி காத்திருந்தது.அதாவது இன்று உயிருடன் இருக்கும் இவரின் சகோதரர் ஒருவரைத் தவிர ஏனையோர் அன்று இவர் மதம் மாறியதையும் கன்னியர் மடத்தில் சேர்ந்ததையும் முற்றாக எதிர்த்தனர். அத்தோடு அவளை வலுக்கட்டாயமாக மடத்திலிருந்து அழைத்துச் செல்ல முனைந்தனர்.ஆனால் அவள் முற்றாக மறுத்ததால் அவளைத் தங்கள் குடும்ப உறுப்பினர் என்ற உறவிலிருந்து விலக்கியதுமல்லாமல் அவளை இறந்தவளாகவே கருதினர். குடும்பத்திலிருந்து தன்னை உதறியத்தள்ளியது அவளுக்கு பெரும் வேதனையைத் தந்திருந்த போதிலும் இறைவன் மேல் கொண்ட அன்பு அவளுக்கு ஆறுதலைக் கொடுத்தது. இளம் அலோய்சியா டொலறோசா தமது 21 ஆவது வயதில் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் துறவற சபையில் சேர்ந்து கொண்டார்.

இளம் அலோய்சியா தன்னுடைய முதல் வாக்குத் தத்தத்தை 1950 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார். அதன்பின் அருட்சகோதரி கில்டா இரண்டு வருடகாலம் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றினார். அதன்பின் சில காலம் கல்லூரி நிர்வாக சேவையில் செயலாளராகப் பணிபுரிந்தார். மேற்படி பதவிக் காலங்களில் குறிப்பிட்ட நேரங்களுக்கு மேலாக வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்படியான சந்தர்ப்பத்தில் தான் அவா சுவையான இனிப்புப் பண்டங்களை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அருட்சகோதரி கில்டா அவர்கள் பிற்காலத்தில் பல கன்னியர் மடங்களில் பணிபுரிந்துவந்துள்ளார். இளவாலை, மன்னார், யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு ,பண்டத்தரிப்பு, உடுவில் ,மிருசுவில் என்பன அவற்றில் அடங்கும்.

அன்று சிவக்கொழுந்து பின் அலோய்சியா .தற்போது யாழ்.திருக்குடும்ப கன்னியர் மாகாண சபையின் தலைவி அருட்சகோதரி கில்டா தற்போது மிகவும் சந்தோசமாகவும் அமைதியுடனும் உள்ளத்தில் சமாதானமும் கொண்டவராக தனது ஆன்மீக வாழ்வில் காணப்படுகிறார். தன்னை சூழவுள்ளவர்களால் நேசிக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வருகிறார். பிறப்பாலே ஓர் உத்தம இந்துவாக இருந்த போதும் மாணவ சமுதாயத்திற்கும் அருட்சகோதரிகளின் முன்னேற்றத்திற்கும் பொதுவாக சமூகத்திற்கும் அரும்பணியாற்றியுள்ளார்.இளம் பராயத்தில் தாய்மை என்ற பரிமாணத்திலிருந்து விலகியபோதிலும் அவர் உண்மையிலேயே எல்லோருக்கும் ஒரு தாய். இறைவன் பணியில் 50 ஆண்டுகள் அவர் ஆற்றிய பணிக்காக இறைவன் அவரை நிறைவாக ஆசீர்வதித்து பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன். ✲




யாழ். றோட்டரிக் கழகமும், சுன்னாகம் றோட்டரக்ட் கழகமும் இணைந்து அண்மையில் மரக்கன்றுகளை விநியோகித்துள்ளன.
யாழ். றோட்டரிக் கழகத் தலைவர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் சனசமூக நிலையப் பிரதிநிதி ஒருவருக்கு மரக்கன்றினை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

## 36 கிராமசேவையாளர் பிரிவு மக்களுக்கு ரூ.2000 கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ.17

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 36 கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளை அதிகாரிகளால் வழங்கப்பட உள்ளது.

ஜே92, ஜே97, ஜே98, ஜே99 மற்றும் ஜே100 முதல் ஜே132 வரையான கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை, கிராமசேவையாளரின் உறுதிக் கடிதம், குடும்ப அட்டை, வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-86-3)

## சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க நிவாரணம் திங்கள் முதல்

தென்மராட்சி,டிசெ.17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடைகளில் நிவாரண உலர் உணவுப் பொருள்களை பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாதத்திற்குரிய பொருள்கள் நாளை திங்கட்கிழமை முதல் அந்தந்த கிளைக்கடைகளில் வழங்கப்படுமென சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்களினால் பெர்மிட்டுக்கள் வழங்கப்பட்ட போதிலும் அரச களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே பொருள்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அரச களஞ்சியத்தில் தற்போது ஒரு தராசு மட்டுமே உள்ளதால் ஒரு நாளைக்கு குறிப்பிட்ட அளவு லொறிகளுக்கே பொருள்கள் ஏற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருள்களை ஏற்றி வருவதற்கு தூர இடங்களிலிருந்து செல்லும் லொறிகள் ஏமாற்றத்துடன் திரும்புவதால் நிவாரணப் பொருள்கள் உரிய காலத்தில் விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.

(இ-117)

## விபத்தில் காயமடைந்த மாணவியின் மருத்துவ செலவுகளை பல்கலை. நிர்வாகம் ஏற்க வேண்டும்

### மாணவர் ஒன்றியம் கோரிக்கை

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ அம்புலன்ஸ் - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவியின் மருத்துவச் செலவுகளை பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு கடந்த 14ஆம் திகதியிடப்பட்டு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரால் துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற விபத்தில் காயமடைந்த எமது சக மாணவி இன்று வரை மயங்கிய நிலையிலேயே இருக்கின்றார். இதனால் இந்த மாணவிக்கு மேலதிக சிகிச்சை வழங்குவது தொடர்பான ஒழுங்குகளை பல்கலைக்கழகம் பொறுப்பேற்க வேண்டும்.

விபத்துடன் தொடர்புடைய இராணுவ சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நியாயமான முடிவைப் பெற்றுத்தர வேண்டும். அத்துடன் இந்த வழக்குத் தொடர்பாக ஏற்படும் முழுச் செலவுகளையும் பல்கலைக்கழக நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும்.

பரமேஸ்வராச் சந்தியில் செல்லும் வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்கான வேகத் தடைகளை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

இப்படி இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதம் துணைவேந்தருக்கு முகவரியிடப்பட்டு பதில் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை -

விபத்தில் காயமடைந்த மாணவியின் தாயாரை மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் அழைத்துவர தான் நடவடிக்கை எடுத்துள்ளதாக துணைவேந்தர் தெரிவித்தார் என மாணவப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.(ம-6-72)

## வல்வை நகரசபைக்கு புதிய அலுவலகம்

நெல்லியடி,டிசெ.17

ஒரு கோடி ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் வல்வெட்டித்துறை நகரசபையின் புதிய அலுவலகம் அடுத்தவருட நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

வல்வெட்டித்துறை சந்திக்கு அருகில் ஏற்கனவே இயங்கி வந்த நகரசபைக்கு சொந்தமான கட்டடம் இராணுவ நடவடிக்கை காரணமாக, சேதம் அடைந்திருந்தது.

இதனால் தற்பொழுது நகரசபை அலுவலகம் தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

இந்த அலுவலகத்தை நிரந்தரமான கட்டடத்தில் இயங்க வைக்கும் பொருட்டு, வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் எடுத்த நடவடிக்கையின் பயனாக, பழைய கட்டடம் முற்றாக இடிக்கப்பட்டு ஒரு கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் அதே இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு மாடிகளைக் கொண்ட இந்த அலுவலகம் 2001 ஆம் வருடம் நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது. (இ-109)

## 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் 10 ஆயிரத்து 443 குடும்பங்களுக்கு தற்போது இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பிரிவில் தற்காலிகமாக இடம்பெயர்ந்து வசித்து வரும் 6 ஆயிரத்து 441 குடும்பங்களும் இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தைப் பெற்று வருகின்றன. (ஐ-135)

## வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

நாடுபூராவும் அரச பணியில் இருக்கும் டாக்டர்களுக்கான வினைத திறன்காண் தடைப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்பரீட்சை யாழ்.போதனா வைத்தியசாலைத் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறுகிறது.

இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து 60 வைத்தியர்கள் தோற்றுகின்றனர். இதற்கான அனுமதி அட்டைகள் கடந்த 15 ஆம் திகதி இங்கு கிடைக்கப்பெற்றன. (ம-15)

## மூன்று ஆண்டுகளில் குடாநாட்டில் 112 பேர் மிதிவெடியால் அங்கவீனம்

### ஐ.நா. மிதிவெடி அகற்றும் திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் கடந்த மூன்று வருட காலத்தில் 112 பேர் மிதிவெடிகளில் சிக்குண்டு அங்கவீனம் அடைந்துள்ளனர். ஐக்கிய நாடுகள் மிதிவெடி அகற்றும் திட்ட இணைப்பாளர் எல்மோ பெர்னாண்டோ இதனைத தெரிவித்தார்.

இவர்களில் 1998ஆம் ஆண்டு 42 பேரும், 1999ஆம் ஆண்டில் 28 பேரும், இந்த ஆண்டு 42 பேரும் காயமடைந்து அங்கவீனர்களாகி உள்ளனர்.

அங்கவீனமடைந்தவர்களில் 5 பேர் மாணவர்களாவர்.

மிதிவெடிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலேயே மிகக் கூடுதலாக மிதிவெடிகள் இருக்கின்றன.

இப் பகுதிகளில் மிதிவெடிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் ஆயிரத்து 62 எச்சரிக்கை விளம்பரப் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

இதேவேளை-

மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் குடாநாட்டிலுள்ள 92 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் நடத்தப்பட்டுள்ளன.

யுத்த நிலை தொடர்ந்து நீடிப்பதால் மிதிவெடிகள் அகற்றும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் ஓயும் போது மிதிவெடி அகற்றும் பணி துரிதப்படுத்தப்படும் என்று மிதிவெடி அகற்றும் திட்ட இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## நாடு நலம் பெற பிரார்த்தனை

நவாலி அருள்மிகு ஸ்ரீகதிர்காம முருகன் கோயிலில் பிரதி செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நாட்டில் ஒற்றுமை, அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறை ஆசிவேண்டி பஜனை கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

## மின்சாரம் தாக்கியது

யாழ்ப்பாணம்,டிசெ.17

தேநீர் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்றுக் காலை மின்சாரத்தினால் தாக்குண்டார்.

யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பிரேம்குமார் தமயந்தி (வயது 22) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

மின் தாக்குதலுக்கு இலக்கானவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஈரக் கையுடன் மின்சார அடுப்புத் தொடர்பு வயரை கழற்றிய போதே இவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது.

இவரது ஒரு கை சற்று செயலிழந்து காணப்படுகிறது. (இ-15)

## லீவு விவரங்களை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.17

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் முதலாம் வருட மாணவர்கள் தங்களுடைய இடர்காலக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக 01.07.1999 முதல் 31.12.1999 வரையிலான காலப் பகுதிக்குரிய லீவு விவரங்களை தாங்கள் கற்பித்த பாடசாலை அதிபர்களிடம் பெற்று கலாசாலையில் உடன் சமர்ப்பிக்குமாறு கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(ம-6)

## பங்கீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கை விவரத்தையும் பிரதேச செயலர் தெரியப்படுத்தி உள்ளார்.

இது தொடர்பாக பிரதேச செயலர் க.குணராசா அரச அதிபருக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளதாக அறியவந்தது. சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களை நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து வேறு பிரிவுகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யுமாறும் பிரதேச செயலர் அரச அதிபரிடம் கேட்டுள்ளார்.

தொடரும் விசாரணைகளுக்கு இவர்களால் இடைஞ்சல்கள் ஏற்படும் எனக் கருதுவதால் இந்த இடமாற்றத்தை உடனடியாகச் செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-ஐ)

## பேச்சுவார்த்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமர் வாஜ்பாய் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய பின்னர் இந்த செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.இதன்போது இந்த மாதத்துக்குள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுமா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை இன்றிப் பேசுவதற்கு அரசு தயார்.ஆனால் அந்தப் பேச்சுக்கள் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பமாவது சாத்தியமற்ற ஒன்று.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் யுத்த நிறுத்தம் செய்யப்படமாட்டாது. நிபந்தனை அற்ற பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இணங்கினால் ஒரு சில நல்லெண்ண நடவடிக்கைகள் குறித்து ஒருதலைப்பட்சமாக ஆராயப்படக் கூடும். விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து அவதானித்த பின்பே அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கும்.

இதேவேளை-

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் குறித்து இந்தியா பாராட்டுத் தெரிவித்துள்ளது எனினும் சமாதானப் பேச்சில் மத்தியஸ்தராகவோ பேச்சுக்கான ஏற்பாட்டாளராகவோ இந்தியா பங்கு கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக இலங்கை கருதவில்லை.

அதேசமயம் சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து இந்தியாவுக்கு அறிவிக்குமாறு நோர்வே அரசைக் கேட்டுள்ளோம்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இப்போதே சர்வதேச சமூகத்தின் கருத்து ஒரேவிதத்தில் அமைந்துள்ளது -

இப்படி கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்ட லக்ஷ்மன் கதிர்காமர் இன்று நேபாளத்துக்கு விஜயம் செய்ய உள்ளார்.

(ம-6)

# கைதடிப் பாலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தரப்புக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்து தகவல் தர முடியவில்லை. எனினும் ராஜ்குமார், கோவலன் ஆகிய புலிகளின் இரு தலைவர்கள் கொல்லப்பட்டது புலிகளின் வானொலித் தகவலை படையினர் இடைமறித்துக் கேட்ட சமயம் தெரிய வந்தது. காயமடைந்தோரை விட்டு விட்டு தப்பிச் செல்லுமாறும் அவர்கள் உத்தரவிட்டது தெரிய வந்தது.

நேற்றைய தாக்குதலின் போது பருத்தித்துறையையும், சரசாலையையும் "ஏ-9" நெடுஞ்சாலையுடன் இணைக்கும் "பி-70" நெடுஞ்சாலையில் 3 சதுர கிலோ மீற்றர் தூரப் பிரதேசமும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இந்தத் தாக்குதலின் போது விமானப் படையினர் விடுதலைப் புலிகள் மீது வெற்றிகரமாகத் தாக்குதல்களை நடத்தினர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கை தொடர்பான தகவல் எதுவும் புலிகள் தரப்பிலிருந்து வெளியிடப்படவில்லை.

(இ-17-173-15-ம-6)

# போர்ச் சூழ்நிலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்திருப்பது குறித்து புலிகள் பெரும் ஏமாற்றம் அடைந்திருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர் நிலைமை, வன்முறை மற்றும் பகைமை போன்ற நிலைமைகள் இருக்கும் போது, உண்மையான அமைதிப் பேச்சுக்களை நடத்தமுடியாது. போர் முழு வேகத்துடன் நடந்து கொண்டிருக்கும் போதே பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியதை தாம் பெரும் வேடிக்கையாகக் கருதுவதாக விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பட்ட பாதகமான முடிவுகளைத் தெரிந்து கொள்ளாதவராக கதிர்காமர் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரைத் தணித்து அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவித்துக் கொண்டு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளை அரசாங்கம் நாம் விதித்துள்ள முன் நிபந்தனையாக திரிபுபடுத்திக் கூறி வருகிறது.

### படைகளை விலக்கக் கோரவில்லை

இயல்பு நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என்ற யோசனையில், யாழ்ப்பாணத்தில் இருந்து படைகளை வாபஸ் பெறவேண்டும் என்று நிபந்தனை விதித்திருப்பதாகவும் அரசாங்கம் திரிபுபடுத்தியுள்ளது. படையினரை விலக்க வேண்டும் என்று நாம் கோரவில்லை -

உணவு, மருந்து மற்றும் பாவனைப் பொருள்கள் மீதான தடையினால் தமிழ் மக்கள், குறிப்பாக வன்னி மக்கள் அவலப்படுகிறார்கள். அதனை நீக்கவேண்டிய காலம் வந்துவிட்டது - என்றும் அந்த அறிக்கை விவரிக்கிறது.

### தாமதமான பதில்

நிபந்தனை எதுவும் இன்றிப் பேசுவதற்குத் தலைவர் பிரபாகரன் விடுத்த அழைப்புக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து தாமதமாகப் பதில் வந்தது குறித்து அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தெரிவித்த பதிலில் பெரும் முரண்பாடுகளும் குளறுபடிகளும் காணப்படுகின்றன. அது நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், பேச்சு நடத்துவதற்குக் கால அட்டவணை, பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே ஏற்கனவே விடுக்கப்பட்ட நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுதல் போன்ற முன்நிபந்தனைகளை விதித்துள்ளது. இந்த நிபந்தனைகள் விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை அல்ல-

போரைத் தணிப்பதற்கு மறுப்பதன் மூலமும், பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனைகளை விதிப்பதன் மூலமும் பேச்சுவார்த்தை முயற்சிகளைத் தடம்புரளச் செய்வதற்கு வேண்டும் என்றே அரசு செயற்படுகிறது -

ஆகையால், அரசாங்கம் அதன் கடும்போக்கு இராணுவ அணுகுமுறையைக் கைவிடுவதற்கு அதனை இணங்க வைக்கவேண்டும் என்று நாம் அனைத்துலக நாடுகளைக் கேட்டுக்கொள்கின்றோம். தமிழர்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு சமாதான வழி, நேர்மை வழி, அறிவுசார் வழிகளை நாடுமாறு சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம் - என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு தரப்புக்களுக்கும் இடையில் பரஸ்பரம் நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையிலும், நம்பிக்கையை வளர்க்கும் விதத்திலும் பொருளாதாரத் தடையை நீக்குதல், போரைத் தணித்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்ற நோர்வேயின் ஆக்கபூர்வமான யோசனைகளை விடுதலைப் புலிகள் அக்கறையுடன் பரிசீலனை செய்து வருகின்றனர். அரசாங்கமே இனி அதனை முன்னெடுக்க வேண்டும் - என்று அறிக்கையின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிமலராஜன் குடும்ப நிதிக்கு

## 12,04,188 ரூபா 75 சதம் கிடைத்தது

குடாநாட்டு மக்களின் அவல நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்லும் புனிதமான பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு உண்மைகளை எடுத்துச் சொல்லும் குரலாக விளங்கியவர் சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன்.

உண்மைகளைச் சீரணிக்க முடியாதவர்களால் அவர் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார். கடமைக்காகத் தன்னுயிர் ஈந்த நிமலராஜனின் மூன்று சின்னஞ்சிறார்களின் எதிர்கால நலன் கருதி அவர்களுக்கு உதவும் மனிதாபிமானப் பணியை 'உதயன்' ஆரம்பித்தது.

நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதிக்கு யாழ்ப்பாணச் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அள்ளி அள்ளி வழங்கினார்கள். நாளாந்தம் பணம் வந்து குவிந்தது. யாழ்.மக்களின் இரக்க சிந்தைக்கும் கருணைக்கும் சிகரம் வைப்பது போல நிதி சேகரிப்புக்கான திகதிக்குப் பின்னரும் பலரும் தேடித் தேடி வந்து தங்கள் நன்கொடைகளை வழங்கினர்.

யாழ்ப்பாண மக்களின் தாராள சிந்தையை எடுத்துக்காட்டும் விதத்தில் மேற்படி நிதிக்கு மொத்தம் **12,04,188 ரூபா 25 சதம்** சேர்ந்துள்ளது.

கருணை உள்ளங் கொண்ட பெருமக்கள் அனைவருக்கும் உதயனின் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்நிதி மிக விரைவில் நிமலராஜன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்படும். விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இம்மாதம் 05 ஆம் திகதி வரை கிடைத்த தொகையையும் நன்கொடைகளை வழங்கியோரின் பெயர் விவரங்களையும் 07.12.2000ஆம் திகதிய உதயனில் பிரசுரித்திருந்தோம்.

அதன் பின்னரும் இம்மாதம் 15 ஆம் திகதி வரை அன்பளிப்புக்களை வழங்கியோரின் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 11,79,452.75 |
| 1. | மிகத் தீவிர தன்மானத் தமிழன்பன், நா.மு. தெரு, பருத்தித்துறை | - 500.00 |
| 2. | இன்ரறக்ட் கழகம், யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் | - 2,695.00 |
| 3. | மக்கள் நலன்காக்கும் பிரிவு, இருபாலை, கோப்பாய் | - 500.00 |
| 4. | ஓர் அன்பர் - அம்பலவாணர் வீதி, உடுவில் | - 100.00 |
| 5. | வே.பொன்னுத்துரை, மந்துவில், கல்வயல் | - 100.00 |
| 6. | மகேஸ்வரி கணபதிப்பிள்ளை, மந்துவில் | - 100.00 |
| 7. | ஓர் அன்பர் - விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை | - 1,000.00 |
| 8. | சில்லாலை அன்பர்கள் | - 1,100.00 |
| 9. | நாகலிங்கம் அன்னலட்சுமி, மணல்தரை வீதி, கந்தர்மடம் | - 100.00 |
| 10. | ஓர் அன்பர் - கரவெட்டி | - 500.00 |
| 11. | கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் சங்க உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் | - 1,575.00 |
| 12. | அமரர் நாகலிங்கம் பாலச்சந்திரவிநாயகர் ஞாபகார்த்தமாக - ஓர் அன்பர் - அராலி | - 100.00 |
| 13. | மாணவர்கள் - யா/சோ் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் | - 734.50 |
| 14. | உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அஞ்சல் அலுவலகம் - கரவெட்டி | - 2,100.00 |
| 15. | வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள், தலைமைக் காரியாலயம் (யாழ்.சாலை, காரைநகர் சாலை) | - 13,531.00 |
| | மொத்தம் | - 12,04,188.25 |


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தனபாலரத்தினம்

(இரத்தினம் பத்தர்)

யாழ்.வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலரத்தினம் (இரத்தினம் பத்தர்) அவர்கள் கொழும்பில் நேற்று (16-12-2000) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாமோதரன் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவளரதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நற்குணராஜா, இந்திரமலர், காலஞ்சென்ற மோகனேஸ்வரி, மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், ராகுலன் (நோர்வே), கிரீஷன் (நோர்வே), துஷிதா (அமெரிக்கா), தனுஷா (பிரான்ஸ்), தர்மிகா (கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வா (அமெரிக்கா), ரஜீதப்பிரியா (நோர்வே), தேன்மொழி (நோர்வே), சிறீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா (அமெரிக்கா), அபிலஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொழும்பு-6. (C/14328)

தகவல்:
தர்மிகா (மகள்)



எமது புதிய பிரமிட் வீடியோ CD வெளியீடு

ரம்யாகிருஷ்ணன், மகேஸ்வரி, அருண்பாண்டியன், செந்தில், சார்லி நடித்த

நாகதேவதை

காலை 8.30 மணிக்கு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அல்டி எலக்ரோனிக்ஸ்

இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/14333)



சயன்ஸ் அக்கடமி

நல்லூர்

தரம் 4 முதல் O/L வரை புதிய அனுமதிகள்!

25.12.2000 வரை மட்டுமே வழங்கப்படும்!! (81774)



கணக்காய்வுப் பரிசோதகர் - போட்டிப் பரீட்சை

வணிககணிதமும் புள்ளிவிபரவியலும்

துரித மீட்டலும் கடந்த கால வினாவிடையும்

18,19,20 - 12-2000

எதிர்வரும் Mon., Tue., Wed.

9.00 - 11.00 வரை(S.L.T)

அறிவொளி - NALLUR (81750)



கணக்கீடு

திரு.முகுந்தன்

B.B.A (Hons) F.M. Spl.

A/L 2002

சொத்து விற்பனைக் கணக்கு

A/L 2001

கிரயக் கணக்கீடு

புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி-யாழ்ப்பாணம். (81760)



TRRO CTC

PRINTERS

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

- கணனியில் அச்சிடுதல்.
- ஸ்ரென்சில் வெட்டுதல்.
- ஓவ்செற்றில் அச்சிடுதல்.

குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

மருதனார்மடம்
(இராமநாதன் கல்லூரி முன்பாக) (C/14318)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.